


# ஜோதிட சூட்சுமங்கள்

ஜோதிட பேராசிரியர்

திரு. துரை மதிவாணன் (சேலம்) அவர்கள் whatsapp

குழுவில் பதிவிட்ட ஒலிப்பதிவுகளின் எழுத்துருவம்.

**பகுதி 1**

**வான சாஸ்திரம்**

**பதிவு 1 2020-02-11 @ 11.53.37 AM**

காலபுருஷ சக்கரத்தில் 1-ம் வீட்டை பிறப்பு என்றும், 8-ம் வீட்டை இறப்பு என்றும் எடுத்துக்கொண்டால் இரண்டுக்குமே செவ்வாய் அதிபதியாக வருவது, மேலும் சனி வீடான 10-ம் வீட்டில் செவ்வாய் உச்சம் பெறுவதும், 4-ம் வீடான சந்திரன் வீட்டில் செவ்வாய் நீசமடைவதும் ஒரு குறிப்பிடத்தக்க தத்துவம் என்றே சொல்லலாம். ஒன்று என்பதும் எட்டும் என்பதும் எல்லைக்கோடாட வைத்துக்கொண்டால் 2, 3, 4, 5, 6, 7-வீடுகள் மட்டும்தானே இப்பூவுலகில் அந்த ஜாதகர் வாழ்க்கையில் நடைபெறும் அனைத்தும் அடங்கும். அப்படி என்றால் 9, 10, 11, 12-ம் வீடுகள் இறப்புக்கு பின்னே நடப்பதைதானே குறிப்பிடும்.

**பதிவு 2 2020-02-11 @ 3.24.52 PM**

ஆன்மா எங்கிருந்து வருகிறது, இப்பூவுலகில் வாழ்ந்து எங்கு செல்கிறது என்பது எவருக்கும் தெரியாத மாபெரும் இரகசியமாகும். எங்கிருந்து வருகிறது என்பது தெளிவான விளக்கமற்ற பலபேர் பல அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்ட அல்லது கண்டுபிடிக்கப்பட முடியாத சில தொகுப்புகள் கொண்டவை. அந்நிலையை அவியாக்தா (Avyakta) என்கிறோம். நாம் வாழும் இந்த காலத்தை வியாக்தா (Vyakta) என்கிறோம். ஒரு ஆன்மா அவியாக்தா (Avyakta) நிலையில் இருந்து வியாக்தா (Vyakta) நிலைக்கு வந்து பின் மீண்டும் அவியாக்தா (Avyakta) நிலைக்கே செல்கிறது. இதுதான் வாழ்வின் இரகசியம். இது பகவத் கீதையில் ”நீ எங்கிருந்து வந்தாயோ அங்கேயே செல்கிறாய்” என்று கிருஷ்ண பரமாத்மாவால் அறிவுரைக்கப்பட்டது. எனவே, நான் மேற்கூறியது போல் லக்னம், 1-ம் வீடு என்பது வாழ்வின் துவக்கம். 8-ம் வீடு என்பது வாழ்வின் முடிவு, மரணம். 2-ம் வீடு என்ற காலபுருஷத்தின் 2-ம் வீட்டில் சந்திரனை உச்சமடைய வைத்திருக்கிறோம். அதே போன்று 8-ம் வீட்டில் சந்திரன் நீசமடைகிறார். சந்திரன் என்பது ஒருவரின் மனதைக் குறிக்கின்ற கிரகம். புத்தியைக் குறிக்கின்ற புதன், இந்திரியங்களைக் குறிக்கின்ற சுக்கிரன், ஆன்மாவைக் குறிக்கின்ற சூரியன் ஆகிய உள்வட்ட கிரககங்கள் அனைத்தும் இந்த 2, 3, 4, 5, 6, 7-ம் வீடுகளில் அடங்கியிருக்கின்றன. ஜாதகத்தை நாம் எவ்வாறு அணுக வேண்டும் என்பதை வெளிவட்ட கிரகங்களான செவ்வாய், குரு, சனியைக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. முதலில் ஜோதிட ஜாதக கட்டங்களில் இந்த உள்வட்ட கிரகங்களும், வெளிவட்ட கிரகங்களும் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை மனதில் நிறுத்தி ஜோதிட விளக்கங்களையோ, பலன்களையோ கூற முற்பட வேண்டும்.

**பதிவு 3  2020-02-11 @ 7.25.52 PM**

மேலே குறிப்பிட்டது போல் ஒன்றாம் வீடு, இரண்டில் சந்திரன், எட்டில் செவ்வாய், ஒன்பதில் குரு ஆகியவற்றை நினைவில் கொள்ள வேண்டும். ஒரு ஜாதகத்தை ஆராயும் போது நாம் பார்க்கவேண்டிய மிக முக்கியமான நான்கு கிரகங்கள் லக்னம், சந்திரன், செவ்வாய் மற்றும் குரு. உள்வட்ட கிரகங்கள் மூலம் இப்பூவுலகில் நாம் மற்றவர்களுடன் எவ்வாறு தொடர்புபடுத்திக் கொள்கிறோம் என்பதை (interacting), அதாவது ஒருவருடன் பழகுவது, குணம், பழக்கவழக்கம், நாம் அதற்காக எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் ஆகியவற்றை தெரிந்து கொள்ளலாம். வெளிவட்ட கிரகங்களான செவ்வாய், குரு, சனி போன்றவை இந்த வாழ்க்கையை நாம் எவ்வாறு வழிநடத்தி செல்வது என்பதை ஒரு தூண்டுகோலாக உணர்த்திக்காட்டும். உதாரணமாக, குரு என்ற கிரகம், ஒன்பதுக்குரியவர், இப்பூவலகில் நமது அதிர்ஷ்டம், பாக்கியஸ்தானம் ஆகிய ஒன்பதாம் வீடு, நாம் முற்பிறவிகளில் செய்து வந்த பிராரப்த கர்மா என்பதை குருதான் நமக்கு வெளிப்படுத்தும். நமது பாவ புண்ணியங்களில், பாவங்களை எவ்வாறு சுமந்து வருகிறோம். அந்த பாவங்களின் தொகுப்பு, அவற்றிற்காக நாம் உள்வட்ட கிரகங்களை எவ்வாறு அவற்றிற்கு உதவிகரமாக ஆக்கிக்கொள்வது போன்றவற்றை குரு வழிநடத்திச் செல்லும். சனி என்பவர் கர்மகாரகர் ஆகியதால், அந்த கர்மத்தை நடத்தி செல்பவர் சனி ஆவார். அவரை Purifier என்று சொல்லலாம். Purifier என்றால் நாம் செய்கின்ற பாவ புண்ணியங்களை நமக்கு வழிநடத்தி அதற்கான பலன்களை / தண்டனைகளை அனுபவிக்க, நம்மை புடம் போட்ட விளக்காக மாற்றுவதற்கு சனி என்பவர் முயற்சி செய்பவர். செவ்வாய் என்ற கிரகம், அவற்றை எவ்வாறு செயல்படுத்துவது, அதற்கான ஆக்க வேலைகள், சக்தியைக் கொடுப்பது போன்றவற்றை தருபவர். இந்த மூன்று கிரகங்களும், நமக்கு என்ன கிடைக்க வேண்டுமோ, அந்த ஜாதகர் தன் வாழ்நாளில் என்ன அனுபவிக்க நேரிடுமோ அதை தங்கு தடையின்றி அனுபவிக்க இந்த வெளிவட்ட கிரகங்களே அந்த ஜாதகருக்கு உதவுகின்றன.

**பதிவு 4  2020-02-12 @ 1.18.25 PM**


காலபுருஷ சக்கரத்தில் இந்த வெளிவட்ட கிரகங்களானவை அந்த சக்கரத்தின் கேந்திர வீடுகளான 1, 4, 7, 10-ல் அதாவது, மேஷம், கடகம், துலாம் மற்றும் மகரம் ஆகியவற்றில்தான் உச்சமும், நீசமும் பெறுகின்றன. இதுவே, உள்வட்ட கிரகங்களான, புதனும், சுக்கிரனும், 6, 12-ம் வீடுகளான கன்னி மற்றும் மீனத்திலும், சந்திரன் 2, 8-ம் வீடுகளான ரிஷப, விருச்சிகத்தில் உச்சமும், நீசமும் பெறுகின்றன. ஒன்பதாம் வீடாகிய

தனுசுவிலும், ஐந்தாம் வீடான சிம்மத்திலும் எந்த கிரகமும் உச்சமோ, நீசமோ அடைவதில்லை. இது ஒரு கவனிக்கத்தக்க விசேஷமான சூட்சும அமைப்பு. காலபுருஷ சக்கரத்தின் 8-ம் வீட்டில் சந்திரன் நீசமடைவதும், அங்கிருந்துதான் அவியாக்தா (Avyakta) நிலை துவங்குகிறது என்று முன்னரே பார்த்தோம். அதாவது அலக்தியாவின் ஆரம்ப நிலையில் செவ்வாயும், குருவும் இணைகின்றன என்று கொள்ளலாம். ஒரு ஜாதகத்தில் அவியாக்தா (Avyakta) நிலையில் லக்னத்திற்கு மிக அருகில் 2-ம் வீட்டில்தான் சந்திரன் உச்சம் பெறுகிறார். இதே நிலையை எந்த ஒரு லக்னத்திற்கும், 2-ம் வீட்டில் சந்திரன் இருந்தால் அல்லது 9-ம் வீட்டில் செவ்வாய் / குரு இருந்தால், அந்த ஜாதகர் உன்னத நிலையை அடைவார் என்று கூறலாம் அல்லவா? எந்த லக்னமாக இருந்தாலும் லக்னத்திற்கு மிக அருகில் சந்திரன் இருப்பது மிகவும் நன்மையான அமைப்பு. சந்திரன் என்பவர் உச்ச பதவிகளைக் கொடுப்பவர் என நவக்கிரக சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது. ”இந்து உச்ச பதவியாம்” என்று அழைக்கப்படுகிறது. இந்து என்றால் சந்திரனே ஆவார். ஆகவே, ஒரு ஜாதகத்தில் லக்னம் / 2 / 12-ல் சந்திரன் இருந்தால் அந்த ஜாதகர் ஒரு உச்ச பதவையை / சமுதாயத்தில் நல்ல மேன்மையான நிலையை அடைவார் என்பது உறுதி. இதை 9-ல் செவ்வாய் / குரு இருக்கும் நிலையில், இந்த பதவி, உயர் பதவி, மேன்மையான நிலை ஆகியன உறுதி செய்யபடுகின்றன.

### பதிவு 5  2020-02-12 @ 6.47.32 PM

வெளிவட்ட கிரகங்களாக செவ்வாய், குருவை குறிப்பிட்டிருந்தோம். செவ்வாய் மற்றும் குரு இரண்டும் சிவ முக்கோணத்தைக் குறிக்கின்றன என்பதை இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதாவது, காலபுருஷ சக்கரத்தின் முதல் வீடு மேஷம் (செவ்வாய்), ஐந்தாம் வீடு சிம்மம் (சூரியன்), ஒன்பதாம் வீடு தனுசு (குரு) ஆகியன ஒரு முக்கோணத்தை ஏற்படுத்துகின்றன. இவற்றை ஒரு முக்கோண வடிவாக அமைத்தால், மேல் நோக்கிய முனையில், முக்கோணத்தின் உச்சிப்பகுதியில் முதலாம் வீடு மேஷமும் (செவ்வாய்), இடது பக்க முக்கோண முனையில் ஐந்தாம் வீடு சிம்மமும் (சூரியன்), வலது பக்க முக்கோண முனையில் ஒன்பதாம் வீடு தனுசும் (குரு) அமையும். அதாவது, சிவ முக்கோணத்தில் செவ்வாய், சூரியன் மற்றும் குரு ஆகியவற்றால் அமையும் முக்கோணத்தில் செவ்வாய் மேல் உச்சியில் இருக்கும். இது தீ நிலையைக் குறிப்பதாகும். தீ என்பது எப்பொழுதும் மேல் நோக்கிச் செல்லும் என்பது அதனுடைய இயல்பு. ஆகவே, முதலாம் வீடு உச்சியில் இருப்பதாகவும், ஐந்தாம், ஒன்பதாம் வீடுகள் கீழ்முனைகளில்

இடது மற்றும் வலது பக்கம் இருப்பதாகவும் புரிந்து கொள்ளவும். அடுத்தது சக்தி முக்கோணம். சக்தி முக்கோணம் என்பது மூன்றாம் வீடு மிதுனம் (புதன்), ஏழாம் வீடு துலாம் (சுக்கிரன்), பதினொன்றாம் வீடு கும்பம் (சனி) ஆகியவற்றைக் கொண்டது. இந்த சக்தி முக்கோணம் சிவ முக்கோணத்தின் மீது, தலைகீழாக அமைய வேண்டும். அதாவது சக்தி முக்கோணத்தின் உச்சி, சிவ முக்கோணத்தின் உச்சிக்கு நேர் எதிரே (கீழே) வருமாறு அமையும். அந்த சக்தி முக்கோணத்தின் உச்சிப்பகுதியில் (பாதாள முனை) ஏழாம் வீடு துலாமும் (சுக்கிரன்), இடது பக்க முனையில் மூன்றாம் வீடு மிதுனமும் (புதன்), வலது பக்க முனையில் பதினொன்றாம் வீடு கும்பமும் (சனி) அமையும். இந்த சிவ முக்கோணமும், சக்தி முக்கோணமும் இணைந்த அமைப்பில் நமக்கு காலபுருஷ சக்கரம் அல்லது ஜாதக வடிவம் கிடைக்கும். உச்சியில் முதலாம் வீடு, அடுத்து முதலாம் வீட்டிற்கும் மூன்றாம் வீட்டிற்கு இடையில் உள்ள பகுதி இரண்டாம் வீடு. மூன்றாம் வீட்டிற்கும் ஐந்தாம் வீட்டிற்கும் இடையில் உள்ள பகுதி நான்காம் வீடு. இப்படியே வீடுகளை அமைத்தால் ஒரு ஜாதகத்தின் பன்னிரெண்டு வீடுகளும் இந்த இரண்டு முக்கோணங்களின் இணைப்பில் நமக்கு கிடைக்கும். சக்தி முக்கோணத்தில், சுக்கிரன், புதன் மற்றும் சனி ஆகியவற்றால் அமையும் முக்கோணத்தில் சுக்கிரன் கீழ் உச்சியில் இருக்கும். இது நீர் நிலையை குறிப்பதாகும். நீர் எப்பொழுதும் கீழ் நோக்கிச் செல்லும் என்பது அதனுடைய இயல்பு.




**பதிவு 6  2020-02-13 @ 4.38.20 PM**

மேற்கண்ட இரண்டு முக்கோணங்களும் இரு விசைகள் (forces) ஆகும். இவற்றில் ஒன்று சிவனின் சக்தி மற்றொன்று மாயா சக்தி ஆகும். ஜாதகத்தில் இந்த இரு சக்திகளும் அந்த ஜாதகதத்தை சமநிலைப்படுத்த உதவுகின்றன. உண்மையில், மாயா சக்தி ஜாதகரை எல்லாவிதமான இந்திரியங்களின் ஆளுமைகளால் தவறுகளையோ / புண்ணியங்களையோ செய்ய வைத்து மற்றொரு ஜென்மம் எடுப்பதற்கு துணைபுரியும். எனவே, இந்திரியங்களை அடக்கி, இப்பூவுலகில் ஆசா பாசங்கள் அற்ற நிலைக்கு செல்வது என்பது மிக மிக சாத்தியமற்ற ஒன்று. எல்லோரும் மாயா சக்தியினால் கட்டுண்டுதான் இப்பூவுலகில் வாழ்ந்து மடிகிறோம், மறு ஜென்மம் அடைகிறோம். மாயா சக்தியை வழிநடத்துவது சிவ சக்தியாகும். அவியாக்தா (Avyakta) நிலை என்பது 9, 10, 11 மற்றும் 12-ம் வீடுகளையும், செவ்வாய், குரு, சனி என்ற கிரகங்களையும் அடக்கி உள்ளது. குறிப்பாக, இந்த சிவனின் சக்தியில் குருவும், செவ்வாயும் அடங்கியிருப்பதை நீங்கள்

அறிவீர்கள். மாயா சக்தி மனிதனை பல தவறுகளை நோக்கியோ அல்லது புண்ணியங்களை நோக்கியோ செயல்பட வைக்கும் என்பது உறுதியாக நீங்கள் அறிய வேண்டும். ஒரு ஜாதகத்தில் நாம் அடுத்து கவனிக்க வேண்டியது கேந்திர ஸ்தானங்கள் ஆகும். கேந்திரங்கள் என்பவை 1, 4, 7, 10-ம் வீடுகளை அடக்கியது. ஆனால், இந்த கேந்திரங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். முதல் வகை கேந்திரம் 1, 4, 7, 10-வீடுகள் அடங்கியவை, இரண்டாம் வகை கேந்திரம் 2, 5, 8, 11-வீடுகள் அடங்கியவை, மூன்றாம் வகை கேந்திரம் 3, 6, 9, 12-ம் வீடுகள் அடங்கியவை.

### பதிவு 7 2020-02-13 @ 4.49.00 PM

இந்த மூன்று வகை கேந்திரங்களும் தங்களுக்குள் எப்படி இணைந்து பலனளிக்கின்றன என்பது பற்றி அறிந்து கொள்வது அவசியம். காலபுருஷ சக்கரத்தில் முதல் கேந்திரத்தில் 1 (செவ்வாய்), 4 (சந்திரன்), 7 (சுக்கிரன்), 10 (சனி) வீடுகளில் இரண்டு வீடுகள் வெளிவட்ட கிரகங்களுக்கும், இரண்டு வீடுகள் உள்வட்ட கிரகங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதே போல் இரண்டாம் கேந்திரத்தில் 2 (சுக்கிரன்), 5 (சூரியன்), 8 (செவ்வாய்), 11 (சனி) வீடுகளில் இரண்டு வீடுகள் வெளிவட்ட கிரகங்களுக்கும், இரண்டு வீடுகள் உள்வட்ட கிரகங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அடுத்து மூன்றாம் கேந்திரத்தில் 3 (புதன்), 6 (புதன்), 9 (குரு), 12 (குரு) வீடுகளில் இரண்டு வீடுகள் வெளிவட்ட கிரகங்களுக்கும், இரண்டு வீடுகள் உள்வட்ட கிரகங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் முதல் கேந்திர வீடுகள் அனைத்தும் சரமாகவும், இரண்டாம் கேந்திர வீடுகள் அனைத்தும் ஸ்திரமாகவும், மூன்றாம் கேந்திர வீடுகள் அனைத்தும் உபயமாகவும் இருப்பதைப் பார்க்கிறோம். ஒவ்வொரு கேந்திர வீடுகளும் அவைகளுக்குள் ஒன்றோடு ஒன்று ஒன்று போலவே தென்படுவதை நன்கு கூர்ந்து கவனித்து அறியலாம். குணங்களை வைத்து (தாமசம், ராட்சசம், சாத்துவம்) பிரித்தாலும் ஒரு கேந்திரத்தில் உள்ள வீடுகள் அனைத்தும் ஒரே குணங்களைக் கொண்டதாக அமைவதையும் பார்க்கலாம். இவற்றில் 1, 4, 7, 10-ம் கேந்திரத்தில் அதிக பலம் பெற்ற வீடு 10-ம் வீடு ஆகும். அந்த 10-ம் வீட்டிற்கு உரியவர் சனி. 2, 5, 8, 11-ம் கேந்திரத்தில் அதிக பலம் பெற்ற வீடு 11-ம் வீடு. அந்த 11-ம் வீட்டிற்கு அதிபதி சனி. 3, 6, 9, 12-ம் கேந்திரத்தில் அதிக பலம் பெற்ற வீடு 12. அந்த 12-ம் வீட்டிற்கு அதிபதி குரு. இந்த ஆளுமைகளில் சனி மற்றும் குரு என இரண்டு கர்ம காரகர்கள் அடங்கியிருக்கும் சூட்சுமத்தை நாம் அறியலாம். சூட்சுமமங்கள் அடங்கியிருப்பதுதான் ஜாதகம். ஏன் 10-ம்

வீட்டை அதிகபட்சமாக, மிகுந்த பலம் பெற்ற ஒரு கேந்திர வீடு என கூறுவதன் காரணம் அறிய வேண்டும். ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒரு மூலத்திரிகோண வீடு இருக்கும். செவ்வாய்க்கு மேஷம், சுக்கிரனுக்கு துலாம், புதனுக்கு கன்னி, சூரியனுக்கு சிம்மம், சந்திரனுக்கு ரிஷபம், குருவுக்கு தனுசு, சனிக்கு கும்பம் என ஓவ்வொரு கிரகமும் தனக்கென ஒரு வீட்டில் மூலத்திரிகோணம் பெறுகின்றன. அந்த மூலத்திரிகோண வீடுகளில் அந்த கிரகங்கள் இருப்பின், அவைகளின் பார்வை எந்த வீடுகளில் விழுகிறது என்று பார்க்க வேண்டும். சனி தனது மூலத்திரிகோண வீட்டில், அதாவது கும்பத்தில் இருந்தால், அது 3-ம் பார்வையாக மேஷத்தையும், 7-ம் பார்வையாக சிம்மத்தையும், 10- பார்வையாக விருச்சிகத்தையும் பார்க்கும். இப்படி ஒவ்வொரு கிரகத்திற்கும் பார்த்தால், 10-ம் வீடான மகரத்தின் மீது மட்டும் எந்த கிரகத்தின் பார்வையும் விழாது. அதனால், 10-ம் வீடு பலம் பெற்ற வீடாகும்.

### பதிவு 8  2020-02-14 @ 3.10.48 PM

சிவ, சக்தி முக்கோணங்களைப்பற்றி மேலும் சில ஆராய்ச்சிகள். சிவத் திரிகோணத்தின் உச்சியில் செவ்வாயும், சக்தி முக்கோணத்தின் உச்சியில் சுக்கிரனும் உள்ளதைக் கவனியுங்கள். செவ்வாய் ஆண், சுக்கிரன் பெண். சிவ நிலையில் உள்ள ஆண், சக்தி நிலையில் உள்ள பெண்ணில் ஒரு தனித்துவமாக அமைந்திருக்கும். பெண்ணிற்கு செவ்வாய்க்கு உரிய குணமான இரத்தம் சம்பந்தப்பட்ட மாதவிடாயும், ஆணிற்கு சுக்கிரனுக்கு உரிய குணமான சுக்கிலமும் தனித்துவமாக அமைந்திருப்பதைப் நாம் அறிகிறோம். ஆணின் விந்து நகரும் சக்தி கொண்டது. அது சுக்கிரனின் காரகத்துவம் ஆகும். எனவே, ஒரு குழந்தை பிறப்பிற்கு தேவையான ஆணின் சுக்கிலம் பெண் சுக்கிரனுடைய பிடியில் இருக்கிறது என்பதும், ஒரு பெண் கருவுறுவதற்கு தேவையான மாதவிடாய் ஆண் செவ்வாயின் பிடியில் இருக்கிறது என்பதையும் அறியலாம். எனவே சூட்சுமமான சில விபரங்கள் ஜாதக கட்டங்களில் இருக்கின்றன. கூர்ந்து கவனித்தால், சிவ, சக்தி முக்கோணங்களில் சந்திரன் தென்படாததை அறியலாம். சந்திரன் என்பவரோ, சந்திரனின் 4-ம் வீடோ இந்த சிவ, சக்தியில் இடம்பெறவில்லை. சந்திரன் உடல் காரகன் என்பதால், உடல் சாஸ்வதமில்லை, நிலையாதது என்பதால் அந்த தத்துவம் இங்கு உணர்த்தப்படுகிறது. மேலும் சனி என்பவருக்கு இரண்டு வீடுகள் காலபுருஷ சக்கரத்தில் இருக்கின்றன. சனி ஒருவருக்கே காலபுருஷ சக்கரத்தில் இரண்டு வீடுகளான 10, 11-ம் வீடுகள் அருகருகே கொடுக்கப்பட்டிருக்கின்றன. சனி என்ற கர்மகாரகன் 10-ம் வீட்டிற்கும்,

11-ம் வீட்டிற்கும் சொந்தமானவர். ஒருவர் பெற்றிருக்கின்ற சஞ்சித கர்மா என்பது 11-ம் வீட்டிலும், அந்த கர்மாவை அவரால் மாற்ற இயலாது என்பதும் இதிலிருந்து புலப்படும். 10-ம் வீடு என்பது, இப்பூவுலகில் இந்த ஜாதகர் இப்பிறவியில் அனுபவிக்க வேண்டிய கர்மாவை 10-ம் வீடுதான் நிர்ணயம் செய்யும். 10-ம் வீடு என்பது எவ்வளவு முக்கிம் என்பது இதிலிருந்து புலப்படும்.

### பதிவு 9  2020-02-14 @ 8.19.44 PM

11-ம் வீடு என்பது கும்பம். அது சக்தி முக்கோணத்தில் அமைந்திருக்கும். அந்த 11-ம் வீடு கும்பம் என்பது ஒரு கலசம். நீர் நிறைந்த ஒரு பானை என்று குறிப்பிடப்பட்டிருக்கும். எனவே அது நீர் நிலைக்கு ஏற்றது என்பதும், பல ஜென்மங்களில் ஜாதகர் செய்திருந்த பாவ புண்ணியங்கள் அந்த 11-ம் வீட்டில் தான் சேமித்து வைக்கப்பட்டிருக்கும். இந்த ஜென்மத்தில் ஜாதகர் அடைய வேண்டிய பாவ புண்ணியங்கள், இந்த ஜென்மத்தில் அனுபவிக்க, அவர் ஜாதகத்தில் நடக்கும் தசா புத்திகளுக்கு ஏற்ப பகிர்ந்தளிக்கப்படும். கேந்திரங்களில் சுக்கிரன் அல்லது குரு என்ற சுபர்கள் நின்றால் ஜாதகர் ஆடம்பரத்தில் ஈடுபாடு கொண்டவராகவும், வண்டி வாகனப் பிரியராகவும், அழகு நிறைந்தவராகவும், ஆயுள் நீடித்தவராகவும் இருப்பார். சுக்கிரனை கேந்திரங்களில் இருக்கப் பெற்றவர்கள் தீர்க்க ஆயுள் பெற காரணம், சுக்கிரன் சஞ்சீவினி மந்திரம் தெரிந்த அசுர குரு ஆவார். சஞ்சீவினி மந்திரம் தெரிந்த சுக்கிராச்சாரியார் இறந்த உடலில் உயிரை மீட்டுத் தரும் வல்லவர். எனவே சுக்கிரன் கேந்திரம் ஏற ஆயுள் பலம் அதிகரிக்கும்.  அதே போன்று, சந்திரன் என்ற கிரகத்திற்கு 6, 7, 8-ம் வீடுகளில் சுபர்கள் இருக்கப்பெற்றவர்கள் அதிர்ஷ்டக்காரர்கள். உலகில் மிகப்பெரிய பணக்காரர்களில் ஒருவரான பில்கேட்ஸ் இந்த ஜாதக அமைப்பைப் பெற்றிருக்கிறார்.

### பதிவு 10  2020-02-15 @ 11.36.14 AM

சுக்கிராச்சாரியார் சஞ்சீவினி மந்திரம் பெற்ற புராணக்கதையை தெரிந்து கொள்ளலாமா? அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் போர் மூண்டபோது, போரில் படுகாயம் அடைந்த அசுரர்களை தனது சஞ்சீவினி மந்திரத்தால் அக்காயங்களை குணப்படுத்தி, அசுரர்களை மரணத்தில் இருந்து விடுவித்துக்கொண்டு இருந்ததால் அந்த போரில் அசுரர்கள் இறப்பது என்பது அரிதாகவே இருந்தது.  எனவே, அசுரர்களை அழிக்க முடியாமல் தேவர்கள் சிவனிடம் வேண்டினார்கள் என்பதும், சிவபெருமான் கார்த்திகை

என்ற ராட்சசியை சுக்கிராச்சாரியாரை விழுங்கி தனது கருவில் வைத்துக்கொள்ளுமாறு ஆணையிட்டார் என்றும், கருவில் அமைந்த சுக்கிரன் சஞ்சீவினி மந்திரத்தை பிரயோகிக்க முடியாமல் அந்த ராட்சசியின் கருவிலேயே இருந்தார் என்பதும் புராணம். ஆயுளை நீட்டிப்பது என்பது ஒருவருக்கு ஏற்படும் நோய் குணமானாலேயே அவரின் ஆயுள் தானாக நீடிக்கும். அதனால், நோயை குணப்படுத்துவதுதான் சஞ்சீவினி மந்திரம் என்றும், அதனால் அவரின் ஆயுள் நீட்டிக்கப்படுகிறது என்பதும் நாம் அறிய வேண்டியது. நோய் விடுதலைக்கு மூலமான சஞ்சீவினி மந்திரத்தை தெரிந்தவர் சுக்கிராச்சாரியார் என்பதால், நோய் விடுதலைக்கும் ஜாதகத்தில் சுக்கிரனின் நிலையை அறிய வேண்டியது அவசியம். மற்றொரு சூட்சுமம் என்னவென்றால், கார்த்திகை என்ற ராட்சசியை கொண்டுதான் சுக்கிராச்சாரியார் அடக்கப்படுவார். இதில் கார்த்திகை என்பது சூரியனின் நட்சத்திரம். சூரியன் ரிஷபத்தில் பகை, அவரே துலாத்தில் நீசம். சுக்கிரன் சிம்மத்தில் பகை. எனவே சூரியனும் சுக்கிரனும் மிகுந்த பகைபெற்ற கிரகங்களாகும். எனவே, நோய் விடுதலைக்கும், மேலும் ஆயுளுக்கும் கவனிக்கப்படவேண்டிய ஒரு கிரகம் சுக்கிரன். அதே போன்று, சுக்கிரன் என்பவர் கடகத்திலோ, சிம்மத்திலோ அல்லது கன்னியிலோ பலம் பெற்று இருக்கமாட்டார். மிதுனத்திலும் பலம் பெற்று இருக்கும் வாய்ப்பு குறைவு. வைத்திய நிலையில் சுக்கிரனுக்கு இரண்டு வீடுகள் ஆட்சி வீடுகள். மற்ற எந்த வீடுகளிலும் சுக்கிரன் பலமாக இல்லை என்பதுதான் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

### பதிவு 11 2020-02-15 @ 5.37.45 PM

பில்கேட்ஸ் அவர்கள் பிறந்த தேதி 28-10-1955 பிறந்த நேரம் இரவு மணி 09.25. பிறந்த ஊர் Seattle, USA. ஒரு ஜாதகத்தை எவ்வாறு அணுகுவது, அதில் இருக்கும் சில நுட்பங்களை, சூட்சுமங்களை தெரிந்து கொண்டு, இது போன்று ஒரு ஜாதகம் நமக்கு கிடைக்கப் பெறும்போது, பலன் கூறுதலில் நாம் சிறிது முன்னெற்றமடைந்து, ஒன்று போலவே பலன் கூற முற்படலாம். ஒன்று போலவே பலன் சொல்வது என்பது இன்று பல ஜோதிடர்களிடம் காணப்படுவதில்லை. ஜாதகர் பில்கேட்ஸ் மிதுன லக்னம், மீன இராசி. ஜாதகத்தில் மூன்றாம் வீட்டில், சிம்மத்தில் குரு. கன்னியில் புதன், செவ்வாய். துலாத்தில் சுக்கிரன், சனி, சூரியன். விருச்சிகத்தில் இராகு, ரிஷபத்தில் கேது. கூர்ந்து கவனித்தால், இந்த ஜாதகத்தின் பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதியான ஐந்துக்குரியவரான சுக்கிரனும், பாக்கிய ஸ்தானாதிபதியான ஒன்பதுக்குரியவரான சனியும் ஐந்தாம் வீட்டிலேயே நீசம் பெற்ற சூரியனுடன் இணைந்து காணப்படுகிறார்கள். ஐந்தாம் அதிபதி, ஒன்பதாம் அதிபதி

இருவரும் ஒருவருடன் ஒருவர் சேர்ந்திருந்தாலோ, ஒருவரை ஒருவர் பார்த்தாலோ மிகவும் பலம் வாய்ந்த ஜாதகம் ஆகிவிடும். அடுத்து, சந்திரன், 2-ம் அதிபதி, 10-ம் இடத்தில் கேந்திரத்தில் நிற்கிறார். லக்னதிற்கும், கேந்திரமான 4-ம் வீட்டிற்கும் அதிபதியான புதன் 4-ல் கேந்திரத்தில் மூலத்திரிகோணம், ஆட்சி, உச்சம் பெற்றிருக்கிறார். அவருடன் 6-க்கும், 11-ம் வீடான லாபஸ்தானத்திற்கும் அதிபதியான செவ்வாய் இணைந்துள்ளார். இராகு / கேதுக்கள் 6 / 12 அச்சில் அமைந்துள்ளன. இவையனைத்தும் இந்த ஜாதகத்திற்கு சிறப்பை சேர்க்கின்றன. உதாரணமாக, சந்திரன் என்பவர் காலபுருஷ சக்கரத்தில் 2-ம் இடமான ரிஷபத்தில் / தன ஸ்தானத்தில் உச்சம் பெறுகிறார். ஜாதகத்தில் அவர் இருக்கும் இடம் 10-ம் இடம், குருவின் வீடு. பூர்வ புண்ணியாதிபதி + பாக்கியாதிபதி சேர்க்கை, சந்திரனின் நிலை ஆகியவற்றால் ஜாதகருக்கு 2-ம் இடத்தின் பலன்களான தனம், சொத்து, பணம், வங்கி கணக்கு, வங்கியில் இருக்கும் பணம், 10-ம் இடத்தின் பலன்களான அந்தஸ்து, பேர், புகழ் தானாக அமைந்தன என்பதை புரிந்து கொள்ள வேண்டும். சந்திரனுக்கு 6, 7, 8-ல் சுபர்கள் இருந்தால் ஜாதகர் "ஆதியோகம்" பெற்றவர் ஆவார். "ஆதியோகம்" என்றால் செல்வ செழிப்பு, அரசருக்கு நிகரான வாழ்க்கை, அதிகாரம், பேர், புகழ், அந்தஸ்து அனைத்தும் கிடைக்கப்பெறுவார் என்பது பொருள். இதில் சில நூல்களில் 6, 7, 8-ல் சுபர்கள் மட்டுமே இருக்க வேண்டும், பாபர்கள் இருக்கக்கூடாது. அப்படி பாபர் இருந்தால் அந்த யோகம் பலன் அளிக்காது என்று குறிப்பிட்டு இருப்பார்கள். அது தவறு. சுபர்கள் இருந்து, பாபர்கள் சேர்ந்து இருந்தாலும் அதற்கான பலனை நிச்சயம் அந்த ஜாதகர் அனுபவிப்பார். உங்களுக்குள் ஒரு கேள்வி எழும். 6, 7, 8-ல் சுபர்கள் இருந்தால் தான் இந்த யோகம் அமையுமா? தனியாக ஒரு கிரகம் மட்டும் இருந்தால் அந்த யோகம் அமையப் பெறுமா? மூன்று கிரகங்கள் மூன்று வீடுகளில் அமைந்திருக்க வேண்டும் என்பது விதி. இரண்டு வீடுகளில் 6, 7 அல்லது 7, 8 அல்லது 6, 8-ல் மட்டும் சுபர்கள் இருந்தாலும் அதற்கான செல்வ அமைப்பு கிடைக்கப்பெறும் என்பதில் சந்தேகம் இல்லை.

### பதிவு 12 2020-02-18 @ 11.24.58 AM

கடந்த பதிவில் பில் கேட்ஸ் ஜாதகத்தில் சந்திரனுக்கு 6-ல் குருவும், 7-ல் புதனும், 8-ல் சுக்கிரனும் அமையப்பெற்றதால் அவர் ஆதியோகம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதில் கவனிக்கத்தக்க விஷயம் என்னவென்றால், சந்திரனுக்கு 6, 7 அல்லது 8-ல் சுபர்களான சுக்கிரன், புதன் அமையப்பெற வேண்டுமானால், சூரியனும் அங்குதானே இருப்பார். சூரியனுடன் சுக்கிரனும், புதனும் நெருக்கமான அமைவில்தானே

எப்பொழுதும் இருப்பார்கள். சூரியனில் இருந்து அதிகபட்சம் 48 பாகைக்குள் சுக்கிரனும், 28 பாகைக்குள் புதனும் அமையப்பெறுவார்கள் அல்லவா? அப்படி என்றால், சந்திரனாகப்பட்டவர், சூரியனை விட்டு விலகி, அவர் சுக்ல பட்ச (வளர்பிறை) திதியில் இருந்தால் தானே இப்படிப்பட்ட அமைப்பு சாத்தியமாகும். சூரியனி நோக்கி வரும் சந்திரனால் (கிருஷ்ண பட்ச திதியில்) இந்த யோகத்தை அளிக்க முடியாது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். எனவே, சந்திரன் என்பவர்தான் இந்த ஜாதகத்திற்கு இந்த யோக அமைப்பை கொடுக்க கடமைப்பட்டவர் என்பதை புரிந்து கொள்ளவேண்டும். அதாவது, சுக்ல பட்ச அமைப்பு பெற்ற சந்திரனாக (வளர்பிறை சந்திரன்) இருக்கப்பெற்றிருந்தால் வாழ்க்கையில் ஏராளமான செல்வ சுகங்களை அனுபவிப்பதற்கு அந்த ஜாதகர் பிறவியிலேயே அம்சம் பெற்றுள்ளார் என்று எடுத்துக்கொள்ளவேண்டும். இங்கு கவனிக்க வேண்டியது என்னவென்றால், சந்திரனுக்கு 6-ல் குரு நிற்க, குருவுக்கு 8-ல் சந்திரன் நிற்க "சகட யோகம்" என்று கேள்விப்பட்டிருக்கிறோம். சகட யோகம் பெற்றவர்கள் வாழ்க்கை ஏற்றமும் இறக்கமும் கலந்து இருப்பதாக ஜோதிடர்கள் சொல்ல கேள்விப்பட்டிருக்கிறோம். இங்கு, லக்னத்திற்கு 10-ல் சந்திரன் அமையப்பெற்று, லக்னத்திற்கு 3-ல் சூரியன் வீட்டில் அமைந்த குரு "சகட யோகத்தை" அளிக்காது என்ற சூட்சுமத்தை இங்கு புரிந்து கொள்ள வேண்டும். புதன் என்பவர் இந்த ஜாதகத்தில், மூலத்திரிகோண, ஆட்சி, உச்சம் பெற்றிருப்பதும், அவரே லக்னாதிபதியாக இருப்பதும், சந்திரனுக்கு 7-ல் அமைவதும், அதே போன்று செவ்வாய் - சந்திரன் ஒருவரை ஒருவர் சமசப்தமாக ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்வதும் இந்த ஜாதகத்தில் சிறப்பான அம்சமாகும். செவ்வாய் - சந்திரன் ஒருவரை ஒருவர் சமசப்தமாக ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்வது சிறப்பான "சசிமங்கள யோகமாகும்". எனவே, பல யோகங்கள் இந்த ஜாதகத்தில் ஒன்றுடன் ஒன்று இணைந்திருப்பதை நாம் காணலாம்.

**பதிவு 13 2020-02-18 @ 5.58.22 PM**

மேற்கொண்டு ஜாதக ஆய்வுகளை செய்யும் முன், சில ஜோதிட நுணுக்கங்களை பார்த்துவிட்டுச் செல்லலாம். திக்பலம் - திக்பலம் என்பது ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒரு குறிப்பிட்ட வீட்டில் அந்த கிரகம் அமையப்பெற்றால் அது திக்பலம் பெற்றுள்ளது என்று எடுத்துக்கொள்ள வேண்டும். ஜாதகத்தில், லக்னத்தில் குருவும் புதனும், நான்காம் வீட்டில் சந்திரனும் சுக்கிரனும், ஏழாம் வீட்டில் சனி, பத்தாம் வீட்டில் சூரியனும் செவ்வாயும் இருப்பின் அவை திக்பலம் பெற்றதாக எடுத்துக்கொள்ளலாம். இந்த ஏழு கிரகங்களுக்கு

மட்டுமே திக் பலம் கூறப்பட்டுள்ளது. ராகு / கேதுக்களுக்கு திக்பலம் கிடையாது. ஜாதகத்தில் மேற்கூறிய வீடுகளில் கிரகங்கள் அடையும் திக்பலத்தை அப்படியே கால புருஷ சக்கரத்தில் பொருத்திப் பார்க்கலாமா? குருவும் புதனும் மேஷத்திலும், சந்திரன் சுக்கிரன் கடகத்திலும், சனி துலாத்திலும், சூரியனும் செவ்வாயும் மகரத்தில் இருப்பதாக கொள்வோம். உச்சம் பெற்ற செவ்வாய் தனது 4-ம் பார்வையால் வீடான மேஷத்தையும், 7-ம் பார்வையால் கடகத்தையும் தானே பார்க்கும். தொழில்காரகன் என்பதற்கு சனியை எடுத்துக்கொள்ளும் நாம், சனி வீட்டில் இருக்கும் சூரியன் செவ்வாயை, சனி பார்க்காதது போல் அமைத்திருப்பது ஏன்? மகரத்தில் செவ்வாய் உச்சம், சூரியன் பகை. இதில் மேஷத்தில் இருக்கும் குருவையும், புதனையும், கல்வி என்ற ஸ்தானத்திற்கு அதை உச்ச வீடாக எடுத்துக்கொள்ள வேண்டும். கடகத்தில் இருக்கும் சந்திரன் சுக்கிரனை, சனி பார்வையில் இருப்பதால், சந்திரன், சுக்கிரன் இரண்டையும் பார்வை பெற்ற கிரகமாக எடுத்துக் கொள்ள வேண்டும். சனியை குருவும், புதனும் மட்டுமே பார்க்கும் அமைப்பு இங்கு இருப்பதை நாம் பார்க்க வேண்டும். ஆனால், திக்பலம் பெற்ற கிரகங்களின் காரகங்கள் வலிமையடையும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவற்றை கால புருஷ சக்கரத்தோடு ஒப்பிடும்போது அவை ஒன்றுடன் ஒன்று எவ்வாறு பொருந்தி உள்ளன என்பதை நாம் ஆய்வு செய்ய வேண்டும்.

### பதிவு 14 2020-02-18 @ 8.31.42 PM

ஒரு ஜாதகத்தில் 1, 4, 7, 10 வீடுகளில் தான் கிரகங்கள் திக்பலம் பெறுகின்றன என்பதை பார்த்தோம். லக்னம் என்பது கிழக்கு திசையையும், 4-ம் வீடு வடக்கு திசையையும், 7-ம் வீடு மேற்கு திசையையும், 10-ம் வீடு என்பது தெற்கு திசையையும் குறிக்கும். குரு லக்னத்தில் திக் பலம் பெற்றதாகவே கருதப்படுகிறது. ஏற்கனவே நாம், 1, 5, 9 வீடுகளில் குரு இருக்கப் பெற்றவர்கள் வாழ்க்கையில் நல்ல அமைப்பு பெற்றிருப்பார்கள் என்று பார்த்தோம். குறிப்பாக லக்னத்தில் குரு இருக்கப் பெற்றவர்கள் மிகவும் பாக்கியசாலிகள். அந்த ஜாதகருக்கு கடும் துன்பங்கள், பிரச்சனைகள் சிக்கல்கள் வாழ்க்கையில் இருந்தாலும் ஏதேனும் ஒரு வகையில் அந்த பிரச்சனைகள் தீர்வதற்கான சாத்தியங்கள் ஏற்பட்டுவிடும். அதைத்தான் நாம் கடவுளின் அனுக்கிரகம் என்கிறோம். லக்னத்தில் குரு இருக்கப் பெற்றவர்கள் ஆயிரம் தோஷங்களால் ஏற்படக்கூடிய தீங்குகளை சமாளிக்கும் சக்தி வாய்ந்தவர்கள் என்று கூட குறித்துக்கொள்ளலாம். லக்னத்தில் புதன் இருப்பவர்களும் ஏறத்தாழ அதேபோன்றுதான். படிப்பாளிகள், கல்விமான்கள்,

தர்க்கவாதிகள், படிப்பு என்ற கல்வி ஸ்தானம் குரு, புதன் லக்னத்தில் இருக்கப் பெற்றவர்களுக்கு அமையும். அதேபோன்று 4-ம் வீடு என்பது வடக்கு. சந்திரன் அல்லது சுக்கிரன் 4-ல் இருந்தாலோ, நல்ல மனம் படைத்தவர்கள், வண்டி வாகனங்கள் மூலமாக மகிழ்ச்சி அவர்களுக்கு கிடைக்கும். அந்த மகிழ்ச்சியை 4-ல் இருக்கும் சுக்கிரன் தருவார். லக்னத்திற்கு 7-ல் சனி, 7-ம் வீட்டை பொதுவாக தாமத திருமணம் என்றுதான் குறிப்பிடுவோம். ஆனால் அங்கு சனி இருக்கும் போது அவர் திக்பலம் பெறுகிறார் என்பதை இங்கு நாம் நினைவில் கொள்ள வேண்டும். காலதாமதமான திருமணத்திற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் திருமணம் கண்டிப்பாக நடைபெறும். அதே போன்று, திருமண வாழ்வில் கணவன், மனைவி இடையே சிக்கல்கள் தோன்றுவதற்கான வாய்ப்புகளும் அதிகமாக இருப்பதையும், களத்திரத்தில் சனி இருக்க களத்திரம் கெடும் என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். எனக்கு கிடைத்த ஜாதகங்களில் 7-ல் சனி இருக்கப் பெற்றவர்கள் இல்லற வாழ்க்கையில் கண்டிப்பாக பிரிவு, விவாகரத்து, பிரிவினைகள் ஏற்படுவதை கண்கூடாக பார்க்கிறேன். அதே போன்று, 10-ல் சூரியன் செவ்வாய் இருக்கப்பெற்றவர்கள் திறமைசாலிகள். அரசாங்கங்கள் மூலமாக அவர்களுக்கு அனுகூலங்கள் ஏற்படும். சமுதாயத்தில் ஒரு உயர்ந்த அந்தஸ்தை அவர்கள் பெற்றிருப்பது நிதர்சனம். ஏற்கனவே திரு.நாச்சியப்பன் ஐயா அவர்கள் ஷட்பல கணித விளக்கங்களை அளித்த போது அதில் திக்பலம் பற்றி குறிப்பிட்டிருந்தார். லக்னத்தில் திக்பலம் பெறும் கிரகம் 7-ல் வீட்டில் திக் பலவீனம் அடையும். 7-ம் வீட்டில் திக்பலம் பெறும் கிரகம் லக்னத்தில் திக் பலவீனம் அடையும். அதே போல் 4, 10-ம் வீடுகளில் ஒரு வீட்டில் திக் பலம் பெறும் கிரகம் அதற்கு நேர் எதிர் வீட்டில் திக் பலவீனம் அடையும்.

### பதிவு 15 2020-02-19 @ 1.32.13 PM


காலச் சக்கரத்தின் 1, 4, 7, 10-ம் வீடுகளில் திக் பலம் பெறும் கிரகங்களைப் அடைவு செய்தால், 7-ல் சனி மற்றும் 10-ல் செவ்வாய் ஆகிய இரு கிரகங்களுக்கு உச்சம் என்ற பலம் பொருந்தி வருகிறது, அதே நேரத்தில் 1-ல் மேஷத்தில் உள்ள உள்ள குரு, புதன் மற்றும் 4-ல் கடகத்தில் உள்ள சந்திரன், சுக்கிரனுக்கு பலம் பொருந்தி வரவில்லை என்ற நிலையை இப்போது ஆய்வு செய்வோம். சரியாக கூறவேண்டுமெனில் சூரியன் மேஷத்தில் உச்சம் பெறுவதால் லக்னத்தில் தானே சூரியன் திக்பலம் பெற வேண்டும், அதே போன்று குரு 4-ம் வீட்டில் கடகத்தில் உச்சம் பெறுவதால், 4-ல் தானே குரு திக்பலம் பெறவேண்டும் என்ற சந்தேகம் நமக்குள் எழுவது இயற்கை. ஆனால், தற்போது திகபலம் அமைப்பில் சூரியனும்


சந்திரனும் எதிர் எதிர் வீடுகளில் இருக்குமாறு அமைக்கப் பெற்றிருப்பதைப் பார்த்தால் அதன் சூட்சுமம் நமக்கு புரியும். சந்திரனுக்கு வீடு கொடுத்தவர்கள், சூரியனை சிம்மத்தில் அமைத்திருக்கலாமே? அது கேந்திரத்தில் அமையாது என்பதால் சூரியனை மகரத்தில் 10-ல் அமைத்திருக்கிறார்கள். அதே போல் புதன் என்பவர், கன்னியில் ஆட்சி/உச்சம்/மூலத்திரிகோணம் பெறுவதால், அந்த 6-ம் வீடு கேந்திரதிற்குள் அடங்காது. குரு என்பவர் 4-ல் உச்சம் பெற்றாலும், அவர் செவ்வாய் வீட்டில் கல்வி ஸ்தானாதிபதியாக புதனுடன் சேர்வதால் கல்வியை கொடுப்பதற்கு தகுதியானவர் போல் அமைக்கப்பட்டிருக்கிறார். எனவே, திக்பலம் என்பது ஒரு திசையை வைத்துதான் அந்த கிரகங்களை அடையாளம் காண்கிறோம். கிரகங்கள் என்பவை இந்த இந்த திசையில் இருந்தால் தான் அனுகூலம் என்பதுதான் கூறப்பட்டிருக்கிறது. கோவில்களில் உள்ள நவக்கிரக அமைப்பு இதை உங்களுக்கு எளிதாக விளக்கும். திக்பலம் என்பது ஷட்பலத்தில் ஒரு பகுதி. ஷ்டபலம் என்பது ஒரு கிரகத்திற்கு ஏற்படும் ஆறு அவஸ்தைகளில் அந்த கிரகம் எவ்வளவு பலம் பெற்றிருக்கிறது என்பதை கணிக்கும் முறை ஆகும். திக்பலம் என்பதும் கால புருஷ சக்கரத்திற்குள் அடங்கியிருப்பதை விளக்கத்தான் மேற்கண்ட பதிவை செய்திருக்கிறேன். இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் இரண்டு வரைபடங்களும் காலச் சக்கர வட்டத்திற்குள் எவ்வாறு இராசி மண்டலம் பொருத்தப்பட்டிருக்கிறது என்பதை விளக்குமாறு வரையப்பட்டிருக்கும். அதனுடைய விரிவாக்கத்தை பின் வரும் பதிவுகளில் நாம் பார்க்கலாம். சூரியன் என்பவர் 6-ம் வீட்டில் அமைந்து சுக்கிரனோ, குருவோ கேந்திரத்தில் இருக்கப்பெற்றவர்கள் ஏராளமான வண்டி வாகனங்களுடன் செல்வ செழிப்பாகவும், நீண்ட ஆயுளுடனும் இருப்பதாக ஒரு கணக்கு. சூரியன் 6-ல் இருப்பதை நாம் மனதிற்குள் நிறுத்தி சிறிது யோசித்தால், நாம் ஏற்கனவே பார்த்தபடி சந்திரனின் பட்சபலம் எவ்வாறு இந்த யோகத்தை தருகிறது என்பது புரியும். அதை பின் வரும் பதிவுகளில் விளக்கமாக காணலாம்.

### பதிவு 16 2020-02-20 @ 5.56.31 PM

6-ம் வீட்டில் சூரியன் இருப்பின் புதனும் சுக்கிரனும் அவருக்கு அருகாமையில் தானே இருப்பார்கள். எனவே, சூரியன் 6-ம் வீட்டில் இருக்கும் ஜாதகங்களில் சுக்கிரன் 7 அல்லது 4, அல்லது சுக்கிரன் என்பவர் சதுர்கேந்திரமோ அல்லது சப்தமகேந்திரமோ அடைவதற்கான வாய்ப்புகள் அதிகம். தசம கேந்திரத்திற்கு செல்வதற்கோ லக்ன கேந்திரத்திற்கு செல்வதற்கோ செல்வதற்கு வாய்ப்பு இல்லை. மற்றொரு நிலையில்

சூரியனும், சுக்கிரனும் ஒரு வீட்டிலோ, அல்லது சூரியனுக்கு 12-ம் வீட்டில் (5-ம் வீடு) சுக்கிரனோ இருக்கப் பெறலாம். அவ்வாறு இருக்கும் ஜாதகங்களில் குரு கேந்திரம் அடைந்திருந்தால் தான் இந்த யோகம் கிட்டும். உதாரணமாக, ஜாதகர் மிதுன லக்னம் என்று வைத்துக்கொண்டால், அந்த ஜாதகர், சூரியன் 6-ம் வீட்டில் இருக்க வேண்டுமெனில், விருச்சிக இராசி (அ) கார்த்திகை மாதத்தில்தானே பிறந்திருப்பார். அப்போழுது அந்த ஜாதகருக்கு கார்த்திகை மாதத்தில் சப்தம கேந்திரத்திற்கு செல்லும் வாய்ப்பு அதிகம். மிதுன லக்னகாரருக்கு 5 மற்றும் 12-ம் அதிபதியானவர் சுக்கிரன். 5-ம் அதிபதி 7-ம் வீட்டில் அமையப்பெறுமானால், அந்த ஜாதகர் காதல் திருமணம் புரிவதற்கு வாய்ப்பிருக்கிறதா? குரு என்பவர் அந்த ஜாதகருக்கு சிம்மத்தில் இருப்பதாக கொள்வோம். சிம்மம் என்பது காலபுருஷ சக்கரத்தின் 5-ம் வீடாகவும், சுக்கிரனையும் 5-ம் பார்வையாக பார்க்கும் பாக்கியமும் இருப்பதால் கண்டிப்பாக காதல் திருமணம் என்பதை திட்டவட்டமாக கூறலாமா? அதே போன்று மிதுன லக்னத்திற்கு 2-ம் வீட்டிற்கு அதிபதி சந்திரன். அந்த சந்திரன் 12-ம் வீட்டில் உச்சம் பெற்றிருப்பதாகக் கொண்டால், சூரியனும் சந்திரனும் பௌர்ணமி திதியில் இருந்து ஜாதகர் பிறந்திருப்பதாகத்தானே அர்த்தம். அந்த ஜாதகரின் ஆயுள்காரகனான, 8-க்கு உரியவரான சனி கேந்திரத்திலோ அல்லது திரிகோணத்திலோ அமையப்பெற்றால், கண்டிப்பாக ஜாதகரின் ஆயுள் தீர்க்கமாக இருக்கும். 70 முதல் 80 வரை இருக்கும் என்று திட்டவட்டமாக இருக்கும் என்று கூறலாம். காலபுருஷ சக்கரத்தின் 5-ம் வீட்டிற்கு அதிபதியான சூரியன் 6-ம் வீட்டில் கன்னியில் இருப்பதாகக் கொண்டால், 5-ம் வீடு என்ற மூலத்திரிகோண வீட்டிற்கு 6-ம் வீடு என்பது ஒரு விருத்தி ஸ்தானம்தானே, எனவே 6-ல் சூரியன் இருப்பது நன்மை என்றுதான் கொள்ள வேண்டும்.






### பதிவு 17  2020-02-22 @ 2.19.57 PM

மேலே கொடுக்கப்பட்டிருக்கும் வரைபடங்கள் மூலம் அமாவாசை, பௌர்ணமி நிகழும்போது பூமி, சூரியன், சந்திரன் இவற்றின் அமைப்புகள் எவ்வாறு இருக்கும் என்று தெளிவாக நாம் அறிந்து கொள்ளலாம். பூமி எப்பொழுதும் கடிகாரம் முள் சுற்றும் திசைக்கு எதிர் திசையிலேயே சூரியனை சுற்றி வருகிறது. அது போல் சந்திரனும் பூமியை சுற்றி வருகிறது. இங்கு பூமியை மையமாக வைத்து சூரியன் பூமியை சுற்றி வருவது போல் ஒரு கற்பனையான படம் கொடுக்கப்பட்டுள்ளது. பூமி மையத்தில் உள்ளது. பூமியை சுற்றிவரும் சந்திரனின் பாதை சிறியதாக பூமியின் மீதே காட்டப்பட்டுள்ளது. அடுத்த வட்டத்தில் அதன் பெரிதுபடுத்தப்பட்ட நிலையும், அதற்கடுத்த சுற்றில் சூரியனின் பாதையும் உள்ளது. பூமியின் ஒரு பகுதியின், சந்திரனின் ஒரு பகுதியும் சூரியனின் ஒளியைப் பெறுகின்றன. சூரிய ஒளி பெறும் பூமியின் பகுதியில் இருப்பவருக்கு அது பகற்பொழுதாக இருக்கும். சூரிய ஒளி பெறாத பூமியின் மறு பகுதியில் இருப்பவருக்கு அது இரவுப்பொழுதாக இருக்கும். அது போல் சந்திரனின் ஒரு பகுதி சூரிய ஒளி பெற்றும், மற்றொரு பகுதி சூரிய ஒளி பெறாமலும் இருக்கும்.  இதையே பூமியில் இருந்து பார்ப்பவருக்கு சந்திரன் தெரியாது. ஏனென்றால் பூமியில் இருந்து பார்ப்பவருக்கு சந்திரனின் சூரிய ஒளி படாத பகுதி மட்டுமே தெரியும். சந்திரனுக்கு சுய ஒளி இல்லை என்பதால் அது சூரிய ஒளியை மட்டுமே பிரதிபலிக்கும் என்பதாலும் சந்திரனை நாம் காண முடியாது. இந்த சூழ்நிலையைத்தான் நாம் அமாவாசை என்கிறோம்.  அமாவாசை என்பதை மூன்றாவது படத்தில் காணலாம். ஒரு 28 நாளில் சந்திரன் தோராயமாக பூமியைச் சுற்றிவருகிறது. 28 நாட்களில் பாதியான

14 நாட்களில் சந்திரன் தன் பாதையில் அரைச்சுற்று எடுத்திருக்கும் அல்லவா. அந்த நிலையைத்தான் நாம் இரண்டாவது படத்தில் காண்கிறோம். அதில் சூரியன், பூமி ஆகியவற்றில் பெரிய மாற்றங்கள் இல்லை. சந்திரன் மட்டும் இடமாற்றம் அடைந்துள்ளது. சூரியனில் இருந்து வரும் ஒளி பூமியில் ஒரு பகுதியிலும், சந்திரனின் ஒரு பகுதியிலும் விழுகிறது. அப்படி சந்திரனில் ஒரு பகுதியில் விழும் சூரிய ஒளியை பூமியில் இருந்து பார்க்கும் நபருக்கு தெரியும். எனவே, சந்திரனின் அரைவட்டமும் சூரிய ஒளியை பிரதிபலிப்பதால் அன்று பௌர்ணமியாக இருக்கும். மற்ற நாட்களில் சூரிய ஒளி படும் சந்திரனின் ஒரு பகுதி நமது பார்வைக்கு குறைவாகவே தென்படும். அதன் குறைவு நிலை படம் 1-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அமாவாசை மற்றும் பௌர்ணமி இரண்டும் எவ்வாறு நிகழ்கிறது என்பது இப்போது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

### பதிவு 18 2020-02-22 @ 2.49.42 PM

மேற்கண்ட அமாவாசை மற்றும் பௌர்ணமி இரண்டின் நிலையில் நாம் தெரிந்து கொள்ளவேண்டிய ஒரு விஷயம் என்னவென்றால் இவை யாவும் பூமி, சந்திரன் மற்றும் சூரியன் ஆகிய மூன்றும் ஒரே நேர்கோட்டில் அமைந்திருக்கும். அமாவாசை அன்று சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் சந்திரன் இருக்கும். இதே, பௌர்ணமி அன்று பூமி சூரியனுக்கும், சந்திரனுக்கும் இடையில் இருக்கும். இதைத்தான் நாம் கால புருஷ சக்கரத்தில் சூரியனும், சந்திரனும் ஒரே வீட்டில் இருப்பதை அமாவாசை என்றும், எதிரெதிர் வீடுகளில் இருப்பதை பௌர்ணமி என்றும் கூறுகிறோம். இதிலிருந்து அமாவாசை பௌர்ணமி நிலைகளைப் புரிந்து கொண்டு, முன் கொடுத்த அமாவாசை எந்த நட்சத்திரத்தில் வருகிறது என்று காட்டும் வரைபடத்தை ஆய்வு செய்யவும். பௌர்ணமியும் ஒரு குறிப்பிட்ட நாளிதான் பௌர்ணமி திதியும் அமையப்பெறும்.

### பதிவு 19 2020-02-24 @ 8.00.21 PM

வானவியலில் பால பாடமாக பூமியைப் பற்றி சிறிது தெரிந்து கொள்வோம். பூமி நீள் கோள வடிவம் உடையது. கோளம் என்பது Sphere என்றும், நீள் கோளம் என்பது Spheroid என்றும் அழைக்கப்படும். இதன் மேற்பகுதியான தலைப்பகுதியை வட துருவம் என்றும், கீழ்ப்பகுதியான கால்ப்பகுதியை தென் துருவம் என்றும் அழைக்கப்படும். பூமியின் மத்தியில், அதை சரிபாதியாக பிரிக்கும் கிடைமட்டமாகச் செல்லும் ஒரு கற்பனைக்கோடு பூமத்திய ரேகை என்று அழைக்கப்படும். இந்த பூமத்திய ரேகையில் இருந்து வட துருவம்

வரை உள்ள பகுதியை வட கோளம் (Northan Hemisphere) என்றும், பூமத்திய ரேகையில் இருந்து தென் துருவம் வரை உள்ள பகுதியை தென் கோளம் (Southern Hemisphere) என்றும் அழைக்கிறோம். இந்த பூமத்திய ரேகைக்கு இணையாக கற்பனையாக வரையப்படும் கோடுகள் அட்சரேகைகள் (Latitude) எனப்படும். இந்த கற்பனை கோடுகளில் பூமத்திய ரேகையில் இருந்து வடக்கே 23.30 பாகையில் இருக்கும் உள்ள ரேகையை கடகரேகை (Tropical Cancer) என்றும், தெற்கே 23.30 பாகையில் இருக்கும் ரேகையை மகரரேகை (Tropical Capricon) என்றும் அழைக்கிறோம். அதே போன்று வட துருவத்தையும், தென் துருவத்தையும் இணைக்கும் (அட்சரேகைகளுக்கு செங்குத்தாக) கற்பனைக்கோடுகளை தீர்க்க ரேகைகள் (Longitude) என்று அழைக்கிறோம். இந்த தீர்க்க ரேகை கோடுகள் வட துருவத்தில் ஆரம்பித்து தென் துருவம் மூலமாக மறுபுறம் மீண்டும் வட துருவத்தை அடையும் அமைப்பில் ஒரு வட்டமாக இருக்கும். இந்த அட்சரேகை மற்றும் தீர்க்க ரேகைகளைக் கொண்டுதான் பூமியில் உள்ல எந்த ஒரு இடத்தையும் துல்லியமாக நாம் நிர்ணயிக்க முடியும். மேலும், இந்த 23.30 பாகைகள் என்று சொல்வது, பூமி சாய்வாக இருப்பதன் காரணமாகத்தான்.

**பதிவு 20 2020-02-27 @ 7.25.27 AM**


சென்ற பதிவில் வானியல் அடிப்படைகள் சிலவற்றைப் பார்த்தோம். அதில், பூமத்தியரேகை (Equator), கடகரேகை (Tropical Cancer), மகரரேகை (Tropical Capricon) என்றும் அழைக்கப்படும். அட்ச ரேகையையும், தீர்க்க ரேகைகையும் கொண்டு எவ்வாறு பூமியில் ஓரு குறிப்பிட்ட இடத்தை எப்படி கண்டறிவது என்பது பற்றி இப்போது பார்க்கலாம். பூமத்திய ரேகையை 0 பாகை என கொள்ள வேண்டும். அதாவது பூமத்திய ரேகை 0 பாகையில் உள்ள அட்சரேகை என்று வைத்துக்கொள்ளவேண்டும். ஒரு பாகைமானியை பூமத்திய ரேகை மீது வைத்துக் கொண்டால், அது 90 பாகையில் வட துருவத்தைக் காண்பிக்கும். அதே நிலையில் பாகைமானியை திருப்பி வைத்தால், நேர் எதிரே இருக்கும் 90 பாகையில் தென் துருவம் இருக்கும். பாகைமானியில் ஒரு 10 பாகையில் இருக்கும் அட்சரேகையில் இருக்கும் ஒரு இடமும், 170 பாகையில் அட்சரேகையில் இருக்கும் ஒரு இடமும் 10 பாகை கோண அளவில் இருக்கும் என்பதை நாம் அறிய வேண்டும். பொதுவாக, பூமி தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றி வருகிறது. ஒரு முறை தன்னைத்தானே சுற்றிக்கொள்வதற்கு 24 மணி நேரம் அல்லது 1440 நிமிடங்கள் எடுத்துக்கொள்கிறது. அதாவது, 360 பாகை சுழல்வதற்கு 1440

நிமிடங்கள் ஆகின்றன. அப்படியெனில் ஒரு பாகை சுழல, 4 நிமிடங்கள் ஆகும் அல்லவா. தீர்க்க ரேகை என்பது வட, தென் துருவங்களை இணைப்பது என்று பார்த்தோம். பூமத்தியரேகையை அட்சரேகைகளில் 0 பாகை என்று கூறுவது போல், தீர்க்கரேகைகளின் 0 பாகை என்பது இங்கிலாந்தில் உள்ள கிரீன்விச் என்ற இடத்தில் உள்ளது. எனவே, பூமியில் ஒரு குறிப்பிட்ட இடம் என்பது அட்சரேகை 0 பாகையில் (பூமத்தியரேகை) இருந்து வடக்கே அல்லது தெற்கே எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றும், தீர்க்கரேகை 0 பாகையில் (கிரீன்விச்) இருந்து கிழக்கே அல்லது மேற்கே எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றும் கணக்கிடப்படும். இந்தியாவின் பொது நேரம் என்பதன் (IST, Indian Standard Time) தீர்க்கரேகை கிழக்கே 82.30 பாகையில் இந்தியாவின் உஜ்ஜயினி நகரின் மேல் செல்லும். ஒரு பாகைக்கு 4 நிமிடங்கள் எனில், 82 பாகைக்கு 30 கலைகள் கடப்பதற்கு 05.30 மணி நேரம் ஆகும். அதாவது, கிரீன்விச்சில் இரவு 12 மணி எனில், இந்தியாவில் அப்போழுது நேரம் காலை 05.30 மணி ஆகும். கிரீன்விச்சில் மதியம் 12 மணி எனில், இந்தியாவில் அப்போது நேரம் மாலை 05.30 மணி ஆகும்.

### பதிவு 21 2020-02-27 @ 8.05.14 AM

இதுவரை அடிப்படையான பாலபாடங்களைப் பார்த்தோம். இனி, ஜோதிடம் சார்ந்த பூகோளம் சார்ந்த அடிப்படையான சில விஷயங்களைத் தெரிந்து கொள்ளுதல் அவசியம். இந்தப் பகுதியில் குறிப்பிடப்படும் விஷயங்கலை நன்கு புரிந்து கொள்ளாவிடில் மேற்கொண்டு செல்வது மிகக் கடினம். எனவே, இனிவரும் பதிவுகளை சிறிது கவனமாக புரிந்து கொள்ளுங்கள். பூகோளம் என்பது எப்படி இருக்கிறதோ அதே போன்று வான் கோளம் என்றும் ஒன்று உள்ளது. வான் கோளத்தை Celestial Sphere என்கிறோம். பூமியைப் போன்றே அதற்கு வெளியே, கற்பனையான ஒரு உருண்டையை, பலமடங்கு பெரிதான கண்ணாடி உருண்டையை கற்பனை செய்து கொள்ளுங்கள். அந்த கண்ணாடி உருண்டைக்குள் மிகச்சிறியதாக இருக்கும் பூமி என்ற மற்றொரு கோளம் சுழன்று கொண்டுள்ளதாக கற்பனை செய்துகொள்ளுங்கள். ஒரு கண்ணாடி உருண்டைக்குள் பூமி என்ற மற்றொரு உருண்டை. இதை, ஒரு பலூனுக்குள் மற்றொரு பலூன் இருந்தால் எப்படி இருக்குமோ அப்படி இருப்பதாக கற்பனை செய்து கொள்ளலாம். வான் கோளம் என்பது பூமியின் அச்சு அசலாக, ஆனால் மிகப் பெரியதாக இருக்கும் ஒரு பெரிய கோளம். பூமியில் நாம் வரைந்த கற்பனைக் கோடுகளான அட்சரேகை மற்றும் தீர்க்கரேகைகள் இந்த வான் கோளத்திலும் வரையப்பட்டிருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். பூமியில் உள்ள

பூமத்தியரேகையும், வான் கோளத்தில் உள்ள பூமத்தியரேகையும் ஒரே அச்சில் இருக்கும். பூமியில் உள்ள பூமத்தியரேகையை போன்றே வான்கோளத்தில் இருக்கும் பூமத்தியரேகையை Celestial Equator என்று கூறுகிறோம். அதாவது, பூமத்தியரேகையை அது இருக்கும் கோளத்தின் பெயருடன் சேர்த்து சொல்கிறோம். அவ்வளவுதான். அதேபோல் வான் கோளத்தில் உள்ள அட்சரேகையை Celestial Latitude என்றும், தீர்க்கரேகையை Celestial Longitude என்றும் அழைக்கிறோம். அதாவது பூகோளத்தில் இருக்கும் கற்பனைக் கோடுகளுக்கு ஒரு பெயரும், அதன் வெளியே வான் கோளத்தில் இருக்கும் கற்பனைக் கோடுகளுக்கு மற்றொரு பெயரும் இட்டு அழைக்கிறோம். எனவே, பூகோளத்தில் வட துருவம், தென் துருவம் இருப்பதைப் போலவே வான் கோளத்திலும் வட துருவம், தென் துருவம் உண்டு. அவற்றை முறையே Celestial North Pole, Celestial South Pole என்று அழைக்கிறோம். இந்த பதிவில் நாம் பார்த்த அனைத்து பதங்களையும் இப்போது வான்கோளத்தில் பொருத்தினால் எப்படி இருக்கும் என்பதற்கான விளக்கப்படம் கீழே தரப்பட்டுள்ளது.




**பதிவு 22 2020-02-28 @ 8.24.41 AM**


சென்ற பதிவில் கிரீன்விச் வழியாகச் செல்லும் தீர்க்கரேகையைப் பற்றி பார்த்தோம். அட்சரேகை 0 பாகை என்பது பூமத்தியரேகை அல்லது நிலநடுக்கோடு என்பது அனைவரும் அறிந்ததே. அதேபோன்று தீர்க்கரேகைகளில் 0 பாகை என்பது கிரீன்விச் வழியாகச் செல்லும், அதனை Prime Meridian அல்லது முதன்மை நெடுங்கோடு என்று அழைக்கிறோம். நம் கண்பார்வையில் இந்த அரைக்கோளத்தில் 0 பாகை என்பது 180 பாகை கோண அளவில் இருக்கும். அதாவது அரைக்கோளத்தில் ஒரு பாதி, வட துருவத்தையும் தென் துருவத்தையும் இணைக்கிறது. அதன் மறுபக்கம் 180 பாகை, பசிபிக் பெருங்கடல் வழியாகச் செல்லும். அந்த கோடு சர்வதேச நாள் கோடு அல்லது International


Date Line (IDL) என்று அழைக்கப்படுகிறது. அங்கிருந்துதான் ஒரு நாள் துவங்குகிறது. சூரியன் அந்த இடத்திற்கு வரும் போது ஒரு நாள் துவங்கி, மேற்கு நோக்கி நகர்ந்து மீண்டும் அது அந்த இடத்திற்கு வரும்போது 24 மணி நேரம் ஆகி, அந்த நாள் முடிவடையும். பூமத்தியரேகைக்கு வடக்கே 23.30 பாகைகள், தெற்கே 23.30 பாகைகள் கொண்ட கடகரேகை என்றும் மகரரேகைக்கு இடைப்பட்ட பகுதிக்கு ”அயனமண்டலம்” என்று பெயர். அதேபோன்று, வடதுருவத்தில் 66.30 பாகைக்கு மேல் இருப்பது ஆர்டிக் என்றும், தென் துருவத்தில் 66.30 பாகைக்கு மேல் இருப்பதை அண்டார்டிக் என்றும் குறிப்பிடுகிறோம். இந்த இரு பகுதிகளும் பனி நிறைந்த பகுதிகள் என்பது நாம் அறிவோம். மேற்கண்ட வரைபடத்தில், மூன்று விதமான வண்ணங்களை நீங்கள் பார்க்கலாம். அதில் சிகப்பு நிறம் எனபது வான்கோள பூமத்தியரேகை பகுதி, பச்சை நிறம் என்பது சூரியனின் பாதை, நீல நிறம் என்பது கீழ்வானம் (Horizon). அந்த படத்தை கூர்ந்து கவனித்தால் இந்த மூன்று நிறங்களும் இணைந்து ஒரு தளமாக (Plane) அமைந்திருப்பதைக் நாம் அறியலாம். வான்கோளத்தில் அமைந்திருக்கும் இந்த மூன்று தளங்கள்தான் ஜோதிடத்திற்கு மிக முக்கியமான தளங்கள் ஆகும். வான்கோளத்தைப் போலவே, சூரிய பாதை கோளம் Ecliptic என்று பெயர்.

**பதிவு 23 2020-02-28 @ 6.13.26 PM**

Prime Meridian(PN)-னின் 180 வது பாகை ஆரம்பிக்கும் அந்தக் கோடுதான் International Date Line (IDL) என்று அழைக்கப்படுகிறது. கிரீன்விச் வழியாகச் செல்லும் அந்த Prime Meridian எந்த வளைவும் இல்லாமல் நேராகச் செல்லும். ஆனால், International Date Line (IDL) கோடு சில தீவுகளின் வழியாகவோ அல்லது சில குடியுரிமைகளின் வழியாகச் செல்லும் போது அந்த இடத்திற்கு ஏற்றவாறு வளைந்து வளைந்து செல்லுமாறு அமைக்கப்பட்டிருக்கும் (அதாவது, ஒரு சிறு தீவாக இருப்பின், அதன் நடுவில் கோடு சென்றால், சிறிய தீவில் ஒரே நேரத்தில் இரண்டு நாட்கள் கணக்கிடப்பட வேண்டிய சூழ்நிலை வரும், அதனால் அப்படிப்பட்ட இடத்தில் அந்த முழு தீவையும் ஒரு புறமாக வைத்து அந்த கோடு வளைந்து செல்லுமாறு அமைக்கப்பட்டிருக்கும்). இதை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். இனி, மூன்று தளங்களைப்பற்றி பார்ப்போம். இதில் முதல் தளம் என்பது Celestial Equator என்ற வான்கோளத்தின் பூமத்தியரேகை. இந்த வான்கோளத்தின் பூமத்தியரேகை என்பது நமது பூகோளத்தின் பூமத்தியரேகையின் பிரதிபலிப்பு பிம்பம் என்று கூட எடுத்துக்கொள்ளலாம். பூகோளம் 23.30 பாகைகள்

சாய்ந்துள்ளது என்று பார்த்தோம். அவ்வாறெனில், இந்த வான்கோளமும் அதே 23.30 பாகைகள் சாய்ந்த நிலையில்தானே இருக்கும். அப்படி இருந்தால்தான் இரண்டு கோளங்களில் உள்ள பூமத்தியரேகைகளும், அட்சரேகைகளும், தீர்க்கரேகைகளும் ஒன்றுடன் ஒன்று பிம்பங்களாகப் பொருந்தும். எனவே, நாம் தெரிந்து கொள்ளவேண்டியது, வான்கோளமும் பூமியைப்போலவே 23.30 பாகைகள் சாய்ந்த நிலையில் இருக்கும். இனி, சூரியப்பாதை கோளத்தைப்பற்றிப் பார்ப்போம். வான் பூமத்தியரேகையைப் பற்றி அறியும் போது, இரு நிலைகளை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். வான்கோளத்தின் வட துருவம் எனப்படும் Celestial North Pole (CNP), வான்கோளத்தின் தென் துருவம் எனப்படும் Celestial South Pole (CSP) எனப்படும் இரண்டு துருவங்களையும் கவனத்தில் கொள்ளவேண்டும். இந்த வானசாஸ்திர பதங்களின் சுருக்கங்களை அதாவது Abriviations-ஐ நினைவில் வைத்துக்கொண்டால் பின்வரும் பாடங்களில் மிகவும் உபயோகமாக இருக்கும். சூரியனை மையமாக வைத்தே அனைத்து கிரகங்களும் சுற்றி வருகின்றன என்பது நாம் அனைவரும் அறிந்ததே. இந்த நிலைக்கு Heliocentric என்று பெயர். ஆனால், பூமியில் இருந்து பார்க்கும் நமக்கு, பூமி நிலையாகவும், சூரியனும், மற்ற கிரகங்களும் பூமியைச் சுற்றி வருவது போல ஒரு மாயத்தோற்றம்தான் தென்படும். எனவே, பூமியில் இருந்து பார்ப்பவருக்கு தினமும் சூரியன் கிழக்கில் தோன்றி மேற்கில் மறைகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. அந்தப் பாதையை ஒவ்வொரு நாளும் குறித்துக்கொண்டே வந்தால், அது ஒரு ஆண்டு சுற்றி வருவதற்கு 365.25 நாட்கள் எடுக்கும். இப்படி குறிக்கப்பட்ட சூரிய பாதை தான் சூரிய பாதை கோளம் அல்லது Ecliptic என்று பெயர். அதுபோலவே, 23.30 பாகைகள் சாய்ந்திருக்கும் வான் மத்திய ரேகைக்கும் இந்த Ecliptic எனப்படும் சூரிய பாதைக்கும் இடைப்பட்ட கோணம் அதே 23.30 பாகைகளாக அமைந்திருக்கும் என்பதை இங்கு நாம் புரிந்துகொள்ளவேண்டும். அதாவது, இரண்டு தளங்களும் ஒன்றுக்கொன்று 23.30 பாகைகள் கோண அளவில் வெட்டிச்செல்லும். அதாவது சூரிய பாதையும், வான் மத்திய ரேகையும் ஒன்றுக்கொன்று இணைவாக இருக்காது. 23.30 பாகைகள் சாய்வில் இரு தளங்களும் இருக்கும். இரு தளங்கள் ஒன்றுடன் ஒன்று சாய்வான நிலையில் வெட்டிச்செல்லும் போது அவைகள் இரு புள்ளிகளில் சந்திக்கின்ற வாய்ப்பு ஏற்படும். அந்த சந்திக்கும் புள்ளிகளைத்தான் நாம் மேஷப்புள்ளி என்றும் துலாப்புள்ளி என்றும் அதாவது Equinox என்று அழைக்கிறோம்.


வான்
வட துருவம்
North Celestial
Pole (Spin Axis)
வான் கோள
பூமத்திய ரேகை
Celestial
Equator
பூமி
Earth
North Pole
வட துருவம்
Prime Meridian
(0 degree Longitude)
பிராதான
தீர்க்க ரேகை
தென் துருவம்
South Pole
Declination
விலக்கம்
South Celestial
Pole
வான் தென் துருவம்
Equator
(0 degree Latitude)
பூமத்திய ரேகை
Right Ascension
வல ஏற்றம்




### பதிவு 24 2020-02-29 @ 1.39.24 PM

Equinox என்பது சம இரவு புள்ளிகள். சம இரவுப் புள்ளிகள் என்றால், இரவும் பகலும் சரி சமமாக இருக்கும். பஞ்சாங்கத்தில் பகலை அகஸ் என்று குறிப்பிடுவார்கள். பஞ்சாங்கத்தில் பார்த்தால் அகஸ் நாழிகை 30 என்று இருக்கும். அதாவது, பகல் பொழுது 30 நாழிகையாக மார்ச் 20 அல்லது 21-ம் தேதி அமையப்பெறும். மேஷப்புள்ளியில் அமையும் இந்த Equinox-ஐ Vernal Equinox என்று அழைப்பார்கள். Vernal என்றால் இளவேனிற்காலம். இதை ”இளவேனிற்கால சம இரவுப்புள்ளி” என்று மனதில் வைத்துக்கொள்ளுங்கள். இதேபோன்று, துலாப்புள்ளியில், செப்டெம்பர் 22 அல்லது 23 அன்று, பகலும், இரவும் சமமாக இருக்கும். அன்று, இரவுப்பொழுது 30 நாழிகைகள், பகற்பொழுது 30 நாழிகைகள் என்று அகஸ் குறிப்பிடப்பட்டிருக்கும். சென்னை அகஸ் என்று பஞ்சாங்கத்தில் குறிப்பிட்டிருப்பார்கள். அகஸ் என்றால் பகல். 23.30 பாகைகள் சாய்வின் காரணமாகத்தான், இந்த புள்ளிகள் ஒன்றை ஒன்று சந்திக்கும் நிலை

ஏற்படுகின்றது என்பதை நாம் ஏற்கனவே பார்த்தோம். அதேபோன்று, பருவ நிலைகள் / பருவ காலங்கள் அனைத்தும் 23.30 பாகைகள் பூமியின் சாய்வின் காரணமாகவே நிகழ்கின்றன. பருவ காலங்கள் / பருவ நிலைகள் என்பவை அல்லது Seasons என்பவை மேற்கத்திய நாடுகளில் Winter, Spring, Summer, Autumn என்ற நான்கு வகையானவைகளாகத்தான் கூறப்பட்டிருக்கும். ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரை, பருவ காலங்கள் ஆறு வகைகள். அவைகளாவன, இளவேனிற்காலம், முதுவேனிற்காலம், கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம். அந்த ஆறு வகை பருவ காலங்களைத்தான், பஞ்சாங்கங்களில் ருதுக்கள் என்று குறிப்பிட்டிருப்பார்கள். ருது என்றால் பருவம் என்று பொருள். ருதுக்களைப் பொருத்தவரை, வசந்த ருது, கரீஷ்ம ருது, வர்ஷ ருது, சரத் ருது, ஹேமந்த ருது, சிசிர ருது என்று ஆறு வகைகளாகப் பிரித்திருக்கிறார்கள். ஒவ்வொரு ருதுவும் இரண்டு மாதங்களைக் கொண்டது. இளவேனிற்காலம் / வசந்த ருது என்பது சித்திரை, வைகாசி மாதங்களில் ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரை இருக்கும். முதுவேனிற்காலம் / கரீஷ்ம ருது என்பது ஆனி, ஆடி மாதங்களில் ஜூன் 15 முதல் ஆகஸ்டு 14 வரை இருக்கும். கார்காலம் / வர்ஷ ருது என்பது ஆவணி, புரட்டாசி மாதங்களில் ஆகஸ்டு 15 முதல் அக்டோபர் 14 வரை இருக்கும். கூதிர்காலம் / சரத் ருது என்பது ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் அக்டோபர் 15 முதல் டிசம்பர் 14 வரை இருக்கும். முன்பனிக்காலம் / ஹேமந்த ருது என்பது மார்கழி, தை மாதங்களில் டிசம்பர் 15 முதல் பிப்ரவரி 14 வரை இருக்கும். பின்பனிக்காலம் / சிசிர ருது என்பது மாசி, பங்குனி மாதங்களில் பிப்ரவரி 15 முதல் ஏப்ரல் 14 வரை இருக்கும். இந்த, பருவங்கள் என்பது Celestial Equator என்ற வான்கோளத்தின் பூமத்தியரேகையும், Ecliptic என்று சூரிய வட்டப் பாதையும் ஒன்றை ஒன்று சந்திக்கின்ற புள்ளிகளால், சாயவாக இருப்பதால் ஏற்படும் விளைவுகள் ஆகும். மேஷப்புள்ளியில் அமையும் இந்த Equinox-ஐ Vernal Equinox என்று அழைப்பார்கள் என்று பார்த்தோமல்லவா, அதே போல் துலாப்புள்ளியில் அமையும் Equinox-ஐ Autumn Equinox என்று அழைப்பார்கள். இதற்கு ”இலையுதிர்க்கால சம இரவுப்புள்ளி” என்று பெயர்.

### பதிவு 25 2020-02-29 @ 2.28.05 PM

சூரியபாதைக்கு மேலும், கீழும் 8 பாகைகள் அளவில் ஒரு வளையத்தைக் கற்பனை செய்து கொள்ளுங்கள். இதுவே இரசி மண்டலம் அல்லது Zodiac என்று அழைக்கப்படுகிறது. இந்த வளையத்தில் (பாதையில்) தான் அனைத்து கிரகங்களும்

பூமியைச் சுற்றி வருவது போல் தோன்றுகிறது. இந்த இராசி மண்டலத்தைத் தான் 12 இராசிகளாகவும், 27 நட்சத்திரங்களாகவும், 108 நட்சத்திர பாதங்களாகவும், 360 பாகைகளாகவும் பிரித்து வைத்துள்ளனர். இந்த சூரிய பாதை (Ecliptic) மேலே தனியாக ஒரு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. அந்த வரைபடத்தில் சூரிய பாதைக்கு மேலே 8 பாகைகள், கீழே 8 பாகைகளுக்கு உட்பட்ட 16 பாகைகளில் ஒரு பட்டை (Belt) போன்று இராசிமண்டலம் வரைந்து காட்டப்பட்டுள்ளது. அந்த இராசி மண்டலத்தில் சூரியபாதைக்கு மேலே உள்ளது வட துருவம், கீழே உள்ளது தென் துருவம் ஆகும். இந்த சூரிய பாதையின் வட துருவத்தை Ecliptic North Pole (ENP), தென் துருவத்தை Ecliptic South Pole (ESP) என்றும் குறிப்பிடலாம். பொதுவாக, நாம் ஒரு கிரகத்தின் இருப்பிடத்தையோ அல்லது நட்சத்திரத்தின் இருப்பிடத்தையோ இதன் வழியாகத்தான் கணக்கிடுகிறோம்.

### பதிவு 26 2020-03-02 @ 3.56.02 PM


இதுவரை வந்த பதிவுகளில் வான சாஸ்திரம் பற்றியும், இராசி மண்டலம், அது எவ்வாறு 12 இராசிகளாக, 27 நட்சத்திரங்களாக, 108 பாதங்களாக பிரிக்கப்பட்டுள்ளது என்பது பற்றி அறிந்தோம். இதில் மேஷப்புள்ளியை எல்லையாக வைத்துத்தான் வானவெளியில் ஒரு நட்சத்திரத்தின் அல்லது ஒரு கிரகத்தின் கிழக்கு, மேற்கு இருப்பிடத்தை அறிந்து கொள்கிறோம். Vernal Equinox என்பதுதான் ஒரு நட்சத்திரத்தைக் கண்டறிய பயன்படுத்தப்படுகின்ற மேஷப்புள்ளியாகும். அதே போன்று, வானில் உள்ள நட்சத்திரத்தின் இருப்பிடம் ஒன்றுபோல் இருந்தாலும், ஒருவர் பார்க்கின்ற இடத்திற்கு ஏற்ப அதன் கோண அளவு மாறுபடும். அதாவது, பொதுத்தளமாக அமைத்துக்கொள்ளும் இடத்திற்கு ஏற்ப அந்த கோண அளவு மாறுபடும். ஏற்கனவே, வான் மத்திய ரேகை மற்றும் சூரியபாதை இவை ஒன்றுக்கொன்று 23.30 பாகைகள் சாய்வுநிலையில் உள்ளன என்று குறிப்பிட்டிருந்தேன். எனவே, ஒரு வான் பொருளை, வான் மத்திய ரேகையை பொதுத்தளமாக வைத்துப் பார்க்கும்போது ஒரு கோண அளவும், சூரிய பாதையை பொதுத்தளமாக வைத்துப் பார்க்கும்போது மற்றொரு கோண அளவும் கிடைக்கப்பெறும். எனவே, இந்த கோண அளவுகளை வைத்துத்தான், நாம், ஒரு நட்சத்திரம் எங்கு உள்ளது என்று கண்டறிகிறோம். இதைப் புரிந்து கொள்வதற்கு மிகச்சுலபமான வழி ஒன்று உள்ளது. சாதாரண பூகோளத்தில் அட்சரேகைகளும் தீர்க்கரேகைகளும் உள்ளன. நாம் இருக்கும் இடத்தைக் கண்டறிய இந்த அட்சரேகைகளும் தீர்க்கரேகைகளும்

பயன்படுகின்றன. உலகில் உள்ள எந்த ஒரு இடத்தையும் இந்த அட்சரேகையையும், தீர்க்கரேகையையும் கொண்டு அந்த இடத்தை கண்டறிந்துவிடலாம். பூகோளத்தைப் போன்றே, வான்கோளமும் அட்சரேகைகளையும், தீர்க்கரேகைகளையும் கொண்டது. இந்த வான்கோள அட்சரேகைகளையும் தீர்க்கரேகைகளையும் கொண்டுதான் ஒரு நட்சத்திரத்தின் இருப்பிடத்தையோ அல்லது ஒரு கிரகத்தின் இருப்பிடத்தையோ நம்மால் கண்டறிய முடியும். இதுவரை அறிந்து கொண்ட வானவியல் கருத்துக்களை நன்கு புரிந்து கொண்டால்தான் நாம் அடுத்த நிலைக்குச் செல்ல முடியும். இந்த வான் கோள தீர்க்கரேகைகளைக் கொண்டு நாம் கிழக்கு மற்றும் மேற்கு திசைகளையும், வான் கோள அட்சரேகைகளைக் கொண்டு நாம் வடக்கு மற்றும் தெற்கு திசைகளையும் தெரிந்து கொள்ளமுடியும். ஏற்கனவே பூமத்தியரேகைக்கு வடக்கே உள்ளதை வட கோளம் என்றும், தெற்கே உள்ளதை தென் கோளம் என்றும் பார்த்தோம். அதே போன்று வான் மத்திய ரேகைக்கு வடக்கே இருக்கும் அந்த அரைக்கோளத்தை வான் வட கோளம் என்றும், தெற்கே இருக்கும் அரைக்கோளத்தை வான் தென் கோளம் என்றும் குறிப்பிடலாம். இந்த வான் அரைக்கோளத்தில் இருக்கும் வான் அட்சரேகைகளைக் கொண்டு ஒரு கிரகம் வடபகுதியில் இருக்கிறதா இல்லை தென் பகுதியில் இருக்கிறதா என்று கண்டறிய முடியும். வடபகுதியில் இருப்பதை N அல்லது + என்றும், தென் பகுதியில் இருப்பதை S அல்லது - என்றும் குறிப்பிடுவார்கள். அதிகபட்சமாக 90 பாகைகள் வரை (N90 / +90 அல்லது S90 / -90) வரை வான் அட்சரேகை அமைந்திருக்கும். இதைத்தான் Declination அல்லது விலக்கம் (கிரந்தி) என்று குறிப்பிடுவார்கள்.

### பதிவு 27 2020-03-03 @ 9.07.23 AM

Declination என்பதை ஆங்கிலத்தில் சுருக்கமாக Dec என்று குறிப்பிடுவார்கள். பஞ்சாங்கங்களில் கிரகங்களின் அன்றைய Declination நிலைகளை + என்றும் - என்றும் குறிப்பிட்டு இருப்பார்கள். அதில் + என்பது வான் பூமத்தியரேகைக்கு வடக்கே என்றும் - என்றும் வான் பூமத்தியரேகைக்கு தெற்கே என்றும் கொள்ள வேண்டும். Declination என்பது வான் அட்சரேகையைக் குறிப்பது என்று புரிந்து கொண்டால் மட்டும் போதுமானது. இனி வான் தீர்க்கரேகை என்பது பற்றி ஆய்வு செய்வோம். தீர்க்கரேகை என்பது பூகோளத்தில் Prime Meridian அல்லது பிரதான நேர்கோடு, உச்சிக்கோடு என்று ஏற்கனவே பார்த்தோம். கீரீன்விச் வழியாகச் செல்லும் அந்த 0 பாகை தீர்க்கரேகையைத்தான் நாம் Prime Meridian என்று கூறுகிறோம். அதே போல் வான்

தீர்க்கரேகையின் 0 பாகை என்ற துவக்கம் நாம் ஏற்கனவே பார்த்த Vernal Equinox அல்லது மேஷத்தின் சம இரவுப் புள்ளியே ஆகும். அதை 0 Equinox என்று அழைக்கிறோம். அதுவே, வான் கோளத்தின் 0 பாகை தீர்க்கரேகையாகும். அதிலிருந்து கிழக்கு நோக்கியே கிரக நிலைகள் அல்லது நட்சத்திர நிலைகள் கண்டறியப்படும். வான் தீர்க்கரேகை 0 Hours அல்லது 0H என்று குறிப்பிடுவார்கள். Hours.Minutes.Seconds-ல் தான் வான் தீர்க்கரேகை அழைக்கப்படும். ஆகவே, வான் தீர்க்கரேகை எனபது 0 பாகை மேஷப்புள்ளியில் இருந்துதான் துவங்குகிறது, மேலும் அதை ஆங்கிலத்தில் Right Ascension அல்லது வல ஏற்றம் என்று அழைப்பார்கள். எனவே, வான் கோளத்தில் இருக்கும் அட்சரேகைகள் Declination என்றும், வான் கோளத்தில் இருக்கும் தீர்க்கரேகைகள் Right Ascension (வல ஏற்றம்) என்றும் அழைக்கப்படும்.



**பதிவு 28 2020-03-03 @ 5.34.28 PM**

சில பதிவுகளுக்கு முன் நாம் ஆய்வு செய்த விஷயங்களில் மூன்று வகையான தளங்கள் இருப்பதை அறிந்தோம். அதில், மூன்றாவதாக சொல்லப்பட்ட தளம் தனியாக மேலே கண்ட வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை Horizon அல்லது கீழ்வானம் என்று குறிப்பிடுவார்கள். Horizon என்பது நாம் நிற்கும் இடத்தில் இருந்து நம் கண் பார்வைக்குத் தெரியும் வானமும், பூமியும் ஒன்றை ஒன்று தொட்டுக்கொள்ளும் இடத்தை நாம் கீழ்வானம், அடிவானம், தொடுவானம் என்று அழைக்கிறோம். அது வரைபடத்தில் வடக்கு தெற்காக கொடுக்கப்பட்டிருக்கும். வரைபடத்தில் Horizon என்பது வட்டமாக க்கொடுக்கப்பட்டிருக்கும். அது நாம் நிற்கும் இடத்தில் இருந்து நம் கண்ணிற்கு தெரியும் தூரம். வட்ட வடிவமாக இருக்கும் அது கண்ணிற்கு தெரியும் பகுதி அல்லது Visible Part என்று பெயர். பூமி சுற்றிக் கொண்டு இருப்பதை நம்மால் உணரமுடியாது. நாம் இருக்குமிடத்தில் நாம் அசைவற்ற நிலையில் இருப்பது போன்ற ஒரு பிரம்மைதான் நமக்குத் தோன்றும். அதே போன்று அந்த கீழ்வானத்தில் அந்த அரைக்கோளம் என்பது மேலே இருக்கும் ஆகாயம் தொடுவானம் இரண்டும் நம் கண்ணிற்கு தெரியும். அதற்கு கீழே இருக்கும் அரைக்கோளம் நம் கண்ணிற்கு தெரியாது. நம்மால் அதை எப்போழுதும் பார்க்க முடியாது. பூமி உருண்டை என்பதற்கான அடையாளமே, அந்த அரைக்கோளமாக நம் கண்ணிற்கு தெரியும் இந்த Horizon தான். ஓரிடத்தில் இருக்கும் பொழுது நம் கண் பார்வைக்கு சுமார் 3 கிலோ மீட்டர் வரை உள்ளவற்றை உணர்வதற்கான வாய்ப்பு உண்டு. சிறியதாகத் தெரியும். அது பக்கமாக வர வர, அந்த பொருளின் முழு வடிவமும் நம் கண்ணிற்கு தெரியும். அது அரைக்கோளமாக இருப்பதால்தான் நம்மால் அப்படி உணர முடிகிறது. அது சம தளமாக இருந்தால், நம் கண்களுக்கு சிறிது சிறிதாக தெரியும் படியான உணர்வு இருக்காது. ஆக, Horizon-க்கு மேல், அதாவது ஒருவர் நிற்பதற்கு நேர் மேல் உச்சியை Zenith உச்சி என்றும், அதற்கு நேர் கீழ்ப்பகுதியை Nadir அல்லது பாதாளம் என்றும் கூறுகிறோம். நம் கண்ணிற்கு தெரியும் அரைக்கோளத்திற்கு மேல் அரைக்கோளம் அல்லது Upper Hemisphere, கண்ணிற்கு தெரியாத அரைக்கோளத்திற்கு கீழ் அரைக்கோளம் அல்லது Lower Hemisphere என்றும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும். நாம் நிற்கும் உச்சியில் இருந்து ஒரு வரைகோட்டை பூமிக்கு நேராக பூமத்தியரேகைக்கு எடுத்துச் செல்லும் கோடு Vertical / Prime Vertex அல்லது பிரதான உச்சிக்கோடு என்று வரைபடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும். எனவே, மூன்று தளங்களைப் பற்றி நாம் அறிந்து கொண்டோம். பூமியின் இந்த Horizon-தான் 12

வீடுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். சூரிய பாதையின் பட்டையில்தான் 12 இராசிகளைக் கொண்ட இராசி மண்டலம் அமைந்திருக்கிறது என்பது நாம் அறிந்ததே. அதே போல், உச்சியான Zenith-தான் 10-ம் பாவகம், Nadir-தான் 4-ம் பாவகம், உதிக்கின்ற கிழக்கு திசைதான் லக்னம், அதற்கு 180 பாகையில் கீழ்வானத்தில் இருப்பதைத்தான் 7-ம் வீடு என்றும் அறியலாம். 12 இராசிகள் வேறு, 12 வீடுகள் வேறு என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

**பதிவு 29 2020-03-04 @ 4.39.15 PM**

இதுவரை நாம் அறிந்து கொண்ட வானியல் சம்பந்தமான விஷங்களாவன,

Sphere - கோளம் (பூகோளம்)
Spheroid - நீள் கோளம்
North - பூகோளத்தின் மேல் உச்சி பகுதி, வட துருவம்
South - பூகோளத்தின் கீழ் கால் பகுதி, தென் துருவம்
Northan Hemisphere - பூமத்தியரேகையில் இருந்து வட துருவ வரை உள்ள பகுதி
Southern Hemisphere - பூமத்தியரேகையில் இருந்து தென் துருவம் வரை உள்ள பகுதி
Equator - பூமத்தியரேகை
Latitude - பூகோளத்தின் அட்சரேகை
Longitude - பூகோளத்தின் தீர்க்கரேகை
Tropical Cancer - கடகரேகை
Tropical Capricon - மகரரேகை
Indian Standard Time (IST) - இந்திய பொது நேரம்
Celestial Sphere - வான் கோளம்
Celestial Equator - வான் கோளத்தின் பூமத்தியரேகை
Celestial Latitude - வான் கோளத்தின் அட்சரேகை
Celestial Longitude - வான் கோளத்தின் தீர்க்கரேகை
Celestial Noreth Pole (CNP) - வான் கோளத்தின் வட துருவம்
Celestial South Pole (CSP) - வான் கோளத்தின் தென் துருவம்
Prime Meridian (PN) - முதன்மை நெடுங்கோடு, கிரீன்விச் வழியாகச் செல்லும், 0 பாகை தீர்க்கரேகை

International Date Line (IDL) - சர்வதேச நாள் கோடு

Horizon - கீழ்வானம்

Ecliptic - சூரிய வட்டப்பாதைக் கோளம்

Heliocentric - சூரியனை மையமாக வைத்து கோள்கள் சுற்றிவரும் நிலை

Vernal Equinax - மேஷப்புள்ளி அல்லது இளவேனிற்கால சம இரவுப்புள்ளி

Autumn Equinox - துலாப்புள்ளி அல்லது இலையுதிர்க்கால சம இரவுப்புள்ளி

Belt - பட்டை

Ecliptic North Pole (ENP) - சூரியபாதையின் வட துருவம்

Ecliptic South Pole (ENP) - சூரியபாதையின் தென் துருவம்

Declination (Dec) - விலக்கம் அல்லது கிரந்தி

Right Ascension - வல ஏற்றம்


Zenith - உச்சிப்பகுதி

Nadir - பாதாளம்

Upper Hemisphere - கண்ணிற்குத் தெரியும் மேல் அரைக்கொளம்

Lower Hemisphere - கண்ணிற்கு தெரியாத கீழ் அரைக்கோளம்

Vertical / Prime Vertex - பிரதான உச்சிக்கோடு





**பதிவு 30  2020-03-04 @ 4.39.15 PM**


மேற்கண்ட படத்தில் வானவியல் சம்பந்தமாக நாம் அறிந்து கொண்ட விஷயங்களைப் பொருத்திப் பார்த்து உணர்ந்து கொள்ளலாம். அதில், ஒவ்வொரு வான் அட்ச ரேகைக்கும், வான் தீர்க்கரேகைக்கும் வான் கோளத்தில் இருக்கின்ற நட்சத்திரங்களைப் பற்றியும் தகவல்கள் இந்த படத்தில் உள்ளன. இந்தப் படத்தில் இருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டியது, வான் மத்தியரேகையும் (Ecliptic), சூரியவட்டப் பாதையும் (Vernal / Autumn Equinax) சந்திக்கும் இரண்டு புள்ளிகளில் ஒன்றுதான் படத்தில் நாம் காண்பது, அதாவது மேஷப்புள்ளி எனப்படும் Vernal Equinax. அந்த மேஷப்புள்ளியானது 0 பாகை Right Ascension மற்றும் 0 பாகை Declination-ல் இருப்பதை

நாம் தெளிவாகப் பார்க்கலாம். 360 பாகைகள் கொண்ட சூரிய பாதையில் ஒரு சுற்று முடிவதற்கு 24 மணி நேரம் எனில், 1 மணி நேரம் கடப்பதற்கு 15 பாகைகள் ஆகும் அல்லவா? எனவே, Right Ascension என்று சொல்லக்கூடிய வான் தீர்க்க ரேகை, ஒரு மணி நேரத்தில் 15 பாகைகள் கடக்கும் என்பதுதான் நாம் அறிந்து கொள்ள வேண்டிய உண்மை.

**பதிவு 31 2020-03-04 @ 5.26.19 PM**

Vernal Equinax எனப்படும் மேஷப்புள்ளி பூமி அச்சின் சுழற்சி காரணமாக, மேற்கு நோக்கி மெதுவாக நகர்ந்து கொண்டே இருக்கிறது. இந்த நகர்வின் காரணமாக, ஒரு நட்சத்திரத்தின் Right Ascension மற்றும் Declination என்பது ஒவ்வொரு நூற்றாண்டுக்கும் 1.30 பாகைகள் அளவிற்கு மாற்றம் இருப்பது தென்படுகிறது. இந்த நகர்வை Precession என்று அழைக்கிறோம். Precession of Equinax என்றால், அந்த புள்ளி நகர்தலைக் குறிக்கும். எந்த ஒரு சுழலும் பொருளும் அதன் உச்சிப்பகுதியில் மாற்றத்தை விளைவிக்கும். ஒரு பம்பரம் சுழலும் போது பம்பரம் தான் சுற்றுவதுடன் மற்றுமல்லாது, அதன் தலைப்பகுதி சுழன்று கொண்டே மற்றொரு வட்டத்தை உருவாக்குவது போல, இந்த பூமியின் அச்சு சுழற்சி காரணமாக இந்த நகர்வு 26000 முதல் 28000 ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள். இந்த திருத்தத்தைதான் நாம் அயனாம்சம் கொண்டு சரி செய்துகொள்கிறோம். அவ்வாறெனில், அயனாம்சம் என்றல் என்ன? அதற்கு நாம், இரண்டு வகையான இராசி மண்டலங்களைப் (Zodiac) பற்றி அறிந்து கொள்ள வேண்டும். ஒன்று Tropical Zodiac, மற்றொன்று Sidereal Zodiac எனப்படும். அந்த மேஷப்புள்ளி நகரும் கால அளவை இதுவரை நாம் 23 பாகைகள் 50 நிமிடங்கள் வரை அயனாம்ச திருத்தம் செய்கிறோம் என்பது குறிப்பிடத்தக்கது. ஆண்டுக்கு 50 செகண்டுகள் வீதம் இந்த திருத்தம் செய்யப்பட வேண்டும். இந்த முறை நிராயன முறை, சாயன முறை என்று பெயரிடப்படுகிறது. எனவே, Tropical மற்றும் Sidereal Zodiac-க்குகளை பற்றி தெரிந்து கொண்டால், அயனாம்சம் பற்றி எளிதாக புரிந்து கொள்ள முடியும்.






The Earth's rotation axis precesses (wobbles) with a period of 26,000 years.

பதிவு 32 2020-03-05 @ 6.01.54 PM

சென்ற பதிவில் பூமியின் அச்சானது மேஷப்புள்ளியில் அந்த சுழற்சி காரணமாக மேற்கு நோக்கி நகர்கின்றது என்று குறிப்பிட்டிருந்தேன். மேலே கொடுக்கப்பட்ட பம்பரம் வரைபடத்தில், அது சுழல்வது போலவும், அது சுழலும்போது அதன் உச்சிப்பகுதியும், அதன் அடிப்பகுதியும் ஒரே அச்சில் எவ்வாறு ஒரு வட்டத்தை உருவாக்குகின்றது என்று தெரிந்து கொள்ளலாம். மேலும், இரண்டாவது படத்தில், உச்சியில் போலாரிஸ் (Polaris) என்று சொல்லக்கூடிய நட்சத்திரக்கூட்டம் இப்பொழுது நமது வட துருவத்தில் காணப்படுகிறது. மேலும், இனி ஒரு 14000 ஆண்டுகள் நகரும்பொழுது இந்த போலாரிஸ் (Polaris) என்ற நட்சத்திரக்கூட்டங்களுக்குப் பதிலாக வேகா (Vega) என்று சொல்லக்கூடிய நட்சத்திரக்கூட்டம் தென்படும். ஆகவே, நட்சத்திரக்கூட்டங்களை நாம் பூமியில் இருந்து பார்ப்பதுமூலம் இந்த நகர்தலை நாம் அறிந்து கொள்ளலாம் என்பது புலனாகிறது. எனவே, சுழற்சியின் காரணமாக மேஷத்தின் சம இரவு காலப்புள்ளியில் ஏற்படும் வேறுபாடு வருடத்திற்கு சுமார் 53 செகண்டுகள் என்று கண்டறியப்பட்டுள்ளது. Tropical Zodiac-ல் இருந்து Sidereal Zodiac-ஐ கண்டறிய நாம் அயனாம்சத்தைக் கழிக்க வேண்டும். Tropical Zodiac என்பது வெப்ப இராசி மண்டலம் என்றும் Sidereal Zodiac என்பது மீன்வெளி வானக இராசி மண்டலம் என்றும் குறிப்பிடுவார்கள். நாம் ஜோதிடத்தில் ஜாதகங்களைக் கணிக்க நாம் பயன்படுத்துவது Sidereal Zodiac என்ற மீன்வெளி இராசி மண்டலமேயாகும். இன்று ஏறத்தாழ அயனாம்சங்கள் நூற்றுக்கணக்கான அயனாம்சங்கள் உலகில் நிலவி வருகின்றன. இரண்டு Zodiac-க்குகளும் ஒன்றை ஒன்று சந்தித்த வருடமாக நம் கிருஷ்ணமூர்த்தி பத்ததியில் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கி.பி 291 என்றும், திரு.பி.வி.இராமன் அவர்கள் அதைவிட அதிகமாக கி.பி 397 என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக, ஒவ்வொரு வானியல் அறிஞர்களும் கணக்கீட்டில் இரு வான மண்டலங்களும் ஒன்றை ஒன்று சந்தித்த வருடமாக எடுத்துக்கொள்வது வேறு வேறாக உள்ளன. அயனாம்சத்தைக் கணக்கிடுவது என்பது துலாப்புள்ளியில் இருக்கும் சித்திரை நட்சத்திரத்தைக் கொண்டுதான். சித்திரை நட்சத்திரத்தின் மத்தியில் அதாவது 06.40 பாகையில் (சித்திரை 3-ம் பாதம்) துலாப்புள்ளியின் துவக்கத்தை எடுத்துக்கொண்டு அதிலிருந்து அசுவினியின் மேஷப்புள்ளி கணக்கிடப்படுகிறது. எனவே, இதை சித்திரபட்சம் அயனாம்சா என்று அழைப்பார்கள். சித்திரை என்பது நட்சத்திரத்தையும் பட்சம் என்பது 180 பாகைகள் என்றும் பொருள். இந்திய அரசின் பஞ்சாங்க புனரமைப்பு குழுவின் தலைவர் என்.சி.லகிரி என்பவர் இந்த சித்திரபட்சம் அயனாம்சத்தை

கொண்டுதான் இந்திய அரசின் அதிகாரபூர்வமான பஞ்சாங்கத்தை கணிக்க தேவையான கணிதங்களை உருவாக்கிக்கொடுத்தார். நமது முன்னோர்கள் சூரிய வழி சித்தாந்தத்திலேயே இந்த அச்சின் சுழற்சி, தடுமாற்றம் போன்றவற்றை கண்டறிந்து அதற்கான வழிமுறைகளை நமக்கு கொடுத்திருக்கிறார்கள்.

### பதிவு 33 2020-03-05 @ 6.28.14 PM

இன்றைய தேதியில் அயனாம்சம் என்பது 23.50 பாகைகள் வெப்ப மண்டல இராசி மண்டலமான Tropical Zodiac-ல் இருந்து கழிக்க வேண்டிய ஒரு கணித அளவாகும். நாம் ஏற்கனவே பார்த்தது போல், நூறு ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த அயனாம்ச அளவு 01.30 பாகைகள் அதிகமாகிறது. இப்போது 23.50 என்றால், இன்னும் ஒரு நூறு ஆண்டுகள் கழித்து 25.00 ஆக இருக்கும். நூறு ஆண்டுகள் வரை நாம் பார்க்கும் இந்த ஜோதிட கணிதத்தில் இந்த அயனாம்ச திருத்தம் பெரிய அளவில் ஜாதக பலனில் எந்த மாற்றத்தையும் தராது என்பதுதான் இங்கு நாம் புரிந்து கொள்ள வேண்டியது. நீங்கள் ஒரு அயனாம்ச கணக்கை கடைபிடித்துக்கொண்டிருந்தால் எவ்வித மாற்றமும் இன்றி பலன் கூறுவதற்கு அதே அளவீடை பயன்படுத்திக்கொண்டே வாருங்கள். அயனாம்சத்தை திருத்த வேண்டிய அவசியம் கிடையாது. ஆனால், கணிதத்தில் ஒரு துல்லியம் தேவைப்படும் என்று விரும்புவர்கள் கண்டிப்பாக கொடுக்கப்பட்ட சூத்திரங்களைக் கொண்டு அயனாம்சத்தை துல்லியமாக கணித்துக்கொள்ளுங்கள். அடிக்கடி அயனாம்சத்தை மாற்றுவதோ அல்லது வேறு அயனாம்சத்திற்கு மாறுவதோ பலன் கூறுவதில் சிக்கல்களை ஏற்படுத்தும் என்பது என்னுடைய அபிப்பிராயம். 26000 வருடங்களுக்கு ஒரு முறை மாறுகின்ற அந்த அயனாம்ச மாறுபாட்டால் பெரிய அளவில் ஜாதகத்தில் மாற்றங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என்பது எனது கருத்தாகும். விருப்பமுள்ளவர்கள் இதைப்பற்றி விவாதிக்கலாம்.

### பதிவு 34 2020-03-06 @ 7.07.01 PM

சூரியன் சம் இரவு கால புள்ளிகள் என மேஷத்தையும், துலாத்தையும் குறிப்பிட்டிருந்தோம். மார்ச் 21-ம் தேதி சம் இரவு நாள் என்றும், அன்றைய தினம் பகலும் இரவும் சமமாக இருக்கும் என்றும் கூறியிருந்தேன். சூரியனின் கிரந்தி அல்லது விலக்கம் (Declination) என்பது வடக்கே +23.30 லிருந்து தெற்கே -23.30 என்பதற்குள்தான் எப்பொழுதும் இருக்கும். நாம் மேஷப்புள்ளியில் Declination என்பது 0 பாகையிலும், Right

Ascension அல்லது வல ஏற்றம் என்பது 0 மணி என்றும் குறிப்பிட்டிருந்தேன். அப்பொழுது சூரிய உதயம் என்பது கிழக்கே 90 பாகையிலும், சூரிய அஸ்தமனம் என்பது மேற்கே 270 பாகையிலும் நிகழும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இதே போன்று, சூரியன் தன்னுடைய பாதையில் பூமத்தியரேகையில் இருந்து நகரும் பொழுது கடக சங்கராந்தி என்று ஜூன் 21-ம் தேதி அமையப்பெறும். இதை ஆங்கிலத்தில் June Solstice அல்லது Summer Solstice என்று குறிப்பிடுவார்கள். அப்பொழுது சூரியனின் Right Ascension 6 மணிகள் என்றும், Declination என்பது 23.30 பாகைகளாகவும் இருக்கும். கடக சங்கராந்தியில் தான் அதிக அளவிலான பக்ற்பொழுதும், குறைந்த அளவு இரவுப்பொழுதும் இருக்கும். அதே நேரத்தில் வடதுருவத்தில் (ஆர்டிக் பகுதி) ஓரிரு நாட்கள் முழுவதும் (24 மணி நேரமும்) பகற்பொழுதாக இருக்கபெறும்.  அதற்கு நேர் எதிர் துருவமான தென் துருவத்தில் (அண்டார்டிக் பகுதி) முழுவதும் (24 மணி நேரமும்) இரவுப் பொழுதாக இருக்கும். இது ஓரிரு நாட்கள் மட்டுமே! சூரியன் அவ்வாறு நகர்ந்து மேற்கே துலாப்புள்ளியை செப்டம்பர் 23-ம் தேதி அன்று அடையும் போது மீண்டும் பகலும் இரவும் சமமாகவே இருக்கும். சூரியன் தனது பாதையில் மேலும் நகர்ந்து டிசம்பர் 21-ம் தேதி December Solstice அல்லது Winter Solstice நிகழும். இதுவே மகர சங்கராந்தி எனப்படும். அன்று பகற்பொழுது குறைவாகவும், இரவுப்பொழுது அதிகமாகவும் இருக்கும். வட துருவப்பகுதியில் 24 மணி நேரமும் இரவாகவும், அண்டார்டிக் பகுதியில் 24 மணி நேரமும் பகலாகவும் காணப்படும். ஜாதகம் கணிப்பதற்கு இது போன்ற காலநிலைகளை தெரிந்து கொண்டால், அதற்கு தகுந்தாற்போல் சில விஷங்களை புரிந்து கொள்ள முடியும். மேஷம், கடகம், துலாம், மகரம் என்ற இந்த நான்கு நிலைகளை மனதில் நிறுத்திக்கொள்ளுங்கள். இந்த நான்கு நிலைகளில் தான் சூரியன் தனது காலநிலை மாற்றங்களை / பருவகாலங்களை நிகழ்த்துகிறது. ஜாதகத்திலும் இந்த நான்கு இடங்கள் ஓரளவு முக்கியமான பங்கினை வகிக்கிறது என்று கொள்ளலாம்.

**பகுதி 1 முற்றுப் பெற்றது.**